# திருக்கோயில்

ஏப்ரல் 1995 விலை ரூ 3-00





தமிழ்நாடு தெய்வீகப் பேரவைக் கூட்டம் மயிலை அருள்மிகு கபாலீசுவரர் கல்யாண மண்டபத்தில் நிகழ்ந்தது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு நடேசன் பால்ராஜ் அவர்கள், அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு ஆர். சந்தானம், ஐ.ஏ.எஸ். அவர்கள் அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் தவத்திரு குன்றக்குடி அடிகள், தவத்திரு சாந்தலிங்க அடிகள், தவத்திரு தொண்டை மண்டல ஆதீனம், தவத்திரு மயிலம் சிவஞானபாலைய சுவாமிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.



முகப்பு:

அருள்மிகு கோதண்டராமர்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.

| மாலை : 37 | திருவள்ளுவர் ஆண்டு 2026 யுவ ஆண்டு சித்திரை 1995 ஏப்ரல் விலை ரூ. 3—00 | மணி : 4 |
|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு **ஆணையர்** அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை—600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

## பொருளடக்கம்

அறநிலையத்துறையின் சாதனைகள்
—மாண்புமிகு அறநிலையத்துறைஅமைச்சர் திருமிகு நடேசன் பால்ராஜ் அவர்கள்

திருக்கடவூர்த் திருத்தலம்
—தேவகி முத்தையா அவர்கள்

அறநிலையத் துறையின் பொற்காலம்.
—பேராசிரியை திருமதி மரியம் உல்ஆசியா

உலகளந்த பெருமாள்
—புலவர் முத்து எத்திராசன் எம்.ஏ.,

மதுரகவியாழ்வார்
—டாக்டர் பருத்தியூர் கே. சந்தானராமன்

அப்பனும் ஆச்சாரியரும்
—ஆர். வேணுகோபாலநாயகர்

ஆண் பெற்ற பிள்ளை
—முருகதாஸ் தீர்த்தபதி

நாயன்மார்கள் அடிச்சுவட்டில்
—தவத்திரு குன்றக்குடி அடிகளார்

நாலாயிரத் திவ்விய பிரபந்த நயவுரை
—டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்

அகவிருள்
—திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. ஆணையாளர் இந்துசமய அறநிலைய ஆட்சித் துறை.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# அறநிலையத்துறையின் சாதனைகள்

**மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்**
**திருமிகு நடேசன் பால்ராஜ் அவர்கள்**



தமிழ்நாடு சட்டசபையில் நேற்று இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்கு மாண்புமிகு அமைச்சர் நடேசன் பால்ராஜ் அவர்கள் பதில் அளித்து பேசியதாவது:—

கோவில் நிலங்களை ஆக்கிரமித்துள்ளவர்கள் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து அவர்களிடமிருந்து கோவில் நிலங்களை மீட்டு அந்தந்த கோவில்கள் வசம் ஒப்படைக்க மாண்புமிகு முதல்வர் **டாக்டர் புரட்சித் தலைவி** அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கோவில் நிலங்களைக் குத்தகைதாரர்களுக்கே சொந்தமாக்கும் கோரிக்கைகள் வருகின்றன. குத்தகை பணத்தைக் கொண்டுதான் பல கோவில்களில் அன்றாட பூஜைகள் நடக்கின்றன. எனவே குத்தகைநிலங்களைச் சொந்தமாக்க இயலாது.

ஆலங்குடி; பேராவூரணி தொகுதியில் உள்ள கோவில்கள் உட்பட பல்வேறு கோவில்களின் திருப்பணி வேலைகள்இந்த ஆண்டு நிறைவேற்றப்பட உள்ளன. அறநிலையத்துறையின் கீழ்வராத கோவில்களுக்குத் திருப்பணி செய்ய கோரிக்கைகள் வந்துள்ளன. அவற்றை ஏற்க இயலாது,

இதே போன்று அறநிலையத்துறையின் கீழ் வராத கோவில்களில் ஒரு காலபூஜை நடத்தவும், ஏற்கனவே பூஜைகள் நடைபெறும் கோவில்களை ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கைகளையும் ஏற்க இயலாது.

தமிழ்நாட்டில் மட்டுமின்றி பீஜித் தீவில் உள்ள முருகன் கோவில் திருப்பணிக்காக ஒரு லட்சம் ரூபாய் வழங்க முதல் அமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளாகள்.

இதே போல் லண்டன் மகாலட்சுமி கோவிலுக்குத் தேக்குமரத்தினால் செய்யப்பட்ட தேர் வழங்குவது பரிசீலனையில் உள்ளது. இலங்கை அறநிலையதுறைஅமைச்சர்இந்து சமய நூல்கள் மற்றும் சிலைகளும் வழங்க வேண்டுமெனக் கேட்டுள்ள கோரிக்கையும் பரிசீலனையில் உள்ளன.

சேலம் மாவட்டம் சென்னிமலை பால சுப்பிரமணியசுவாமி கோவில் உட்பட ஐந்து கோவில்களில் 33 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் திருமண மண்டபம் கட்டும்பணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு, திருச்செந்தூர் முருகன் கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், சங்கரன் கோவில் சங்கரநாராயண சுவாமி கோவில் உட்பட 80 கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்படும்.

இதுவரை 18 ஆயிரத்து 580 கோவில்களில் 38 ஆயிரத்து 642 அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தவறு செய்யும் அறங்காவலர்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கோவில் திருட்டுக்களைத் தடுக்க அரசு போதியஏற்பாடுகளைச் செய்துவருகிறது. திருச்செந்தூர் திருத்தணி உட்பட மிகப் பெரிய கோவில்களில் காவலர்களுக்குத் துப்பாக்கி வழங்கப்பட்டுள்ளது.

கோவில் திருட்டுக்களைத் தடுப்பதில் அந்தந்த ஊர்மக்களும் பெரியவர்களும் பக்திமான்களும் கொண்ட குழுக்களை அமைக்க முதல் அமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்து மதத்தின் பெருமையும், மகான்களின் போதனைகளும் மடாதிபதிகளால் பரப்பப்பட்டு வருகின்றன. தவிர இந்து சமயத்தைச் சேர்ந்த ஆன்றோர்கள் உலகம் முழுவதும் இந்து சமயத்தின் சிறப்புகளைப் பரப்பி வருகிறார்கள்.

இவ்வாறு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் நடேசன் பால்ராஜ் அவர்கள் கூறினார்கள். அதன்பின் அறநிலையத்துறை மானிய கோரிக்கைத் தீர்மானம் குரல் ஓட்டு மூலம் நிறைவேறியது.

# திருக்கடவூர்த் திருத்தலம்

*திருமதி தேவகி முத்தையா*

***உறுப்பினர், தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியம், சென்னை.***

திருக்கடவூர் எனும் தலம் தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்குத் தென்கிழக்கே 22 கி.மீ. தொலைவிலும் காவிரிப்பூம்பட்டினத்திற்கு 9 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. அட்ட வீரட்டங்களில் முதலாவது தருமையாதீனத்தின் அருளாட்சிக்குட்பட்ட 27 திருக்கோயில்களுள் சிறப்புமிக்கஒன்று . மார்க்கண்டேய முனிவரைக் காக்கும் பொருட்டு காலசம்காரம் நிகழ்ந்த தலம். இறைவனது திருநாமம் அமிர்தகடேசர். இறைவியின் திருநாமம் அபிராமவல்லி.

**தலச்சிறப்பு ;**

பிரம்மன் ஞானோபதேசம் பெற விரும்பி, சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தான். தவத்திற்கு இரங்கிய இறைவன் தன் ஞானத்தினையே வில்வ விதையாக்கி அவ்வில்வ விதையினைப் பிரம்மனிடம் கொடுத்து' இவ்விதை எத்தலத்தில் ஒரு முகூர்த்த காலத்தில் (ஒன்றரை மணி நேரம்) முளைக்கின்றதோ அத்தலமே உனக்கு ஞானோபதேசம் கிடைக்குமிடம்' என்றுஅருள, பிரம்மனும் அவ்வாறே பல இடங்களில் இட்டுப்பார்த்து அது முளைக்கவில்லை. இத்தலத்தில் இட்டதும் குறித்த காலத்தில் முளைத்தது. பிரம்மனும் இறைவனை வழிபட்டு ஞானோபதேசம் பெற்றான். இதனால் இத்தலம் வில்வவனம் என்றும் இங்கு வில்வ மரம் தல விருட்சமாகவும் விளங்குகின்றது. பிரம்மன் பூசித்த சிவலிங்கம் வில்வவனேச்வரர் என்ற பெயரோடு மேற்கு நோக்கிய சந்நிதியாக சுவாமி கோயில் வடக்குப் பிராகாரத்தில் பிச்சாடன மூர்த்தி சபைக்குக் கீழ்ப்பால் அமைந்துள்ளது. மார்க்கண்டேயர் வரவழைத்த கங்கையில் சாதிமுல்லைக் கொடியும் வந்தமையால் அதுவும் இங்கு தல விருட்சமாகவும் திகழ்கின்றது. தலத்திற்குப் பிஞ்சிலவனம்(பிஞ்சிலம் சாதி முல்லை) எனும் பெயரும் உண்டு.

**திருக்கடவூர் - பெயர்க் காரணம் ;**

அசுரர்களும்.தேவர்களும் அமிர்தம் பெற வேண்டிப் பாற்கடலைக் கடைந்தனர்.அமிர்தம் என்றென்றும் இளமையையும் இறவாத் தன்மையையும் தரவல்ல தெய்வீகத் திரவியம்.இத் திரவியத்தைப் பெற மந்திர மலையை மத்தாகவும் வாசுகி எனும் சர்ப்பத்தைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடையத் தொடங்கினர். கடையக் கடைய வாசுகிப் பாம்பின் விஷமூச்சு கறுத்த ஆலகாலம் என்ற கொடிய நஞ்சாக வெளிவந்து சூழ்ந்து கொண்டது. ஆலகாலம் அண்ட சராசரத்தையும் அழிக்க வல்ல கொடிய விஷமானதால் அனைவரும் கலங்கி நின்றனர். உலகனைத்தையும் காக்கும் பொருட்டு சிவபெருமான் அதைத் தாமே உண்டார்.

இறைவன் விடத்தை உட்கொண்டால் அவனுள் இருக்கும் அத்தனை கோடி ஜீவ ராசிகளும் அழிந்துபடும் என்று, இறைவி அந்த விடத்தைக் கண்டத்திலேயே தங்கச்செய்தாள். இறைவன் திருநீலகண்டர், காலகண்டர் ,என்று பெயர் பெற்றார். பின்பு பாற்கடலைக்கடைய ஐராவதம் என்ற வெள்ளை யானை, உச்சைசிரவம் என்ற குதிரை, கற்பக விருட்சம், காமதேனு, ஆறுகோடி அப்ஸரஸ் பெண்டிர்தோன்ற அவற்றை இந்திரன் ஏற்றுக் கொண்டார். மகாலட்சுமி தோன்ற ஸ்ரீமன் நாராயணன் அவளை வரித்து ஸ்ரீலட்சுமி நாராயணன் ஆனார். கௌஸ்துபத்தையும் அவரே ஏற்றார். பின்பு தோன்றியது அமிர்தம். அவ்வமிர்தத்தைத் தேவர்களும் அசுரர்களும் பகையின்றிப் பகிர்ந்துண்ண விரும்பி, அதற்கான தகுந்த இடத்தைப் பிரம்மனிடம் கேட்க, பிரம்மாவும் 'புலியும் மானும் பகைமை நீங்கி ஓரே தீர்த்த கரையில் நீர் குடிக்கும் தலமொன்று உண்டு. அங்கு அமிர்தத்தை உண்டால் அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் உள்ள பகைமை நீங்கும். அத்தகைய இடம் வில்வ வனம்' என்று கூறினார். அசுரர்களும் தேவர்களும் அமிர்தமடங்கிய கடத்தை வில்வ வனத்தில் வைத்துவிட்டு, குளித்துவிட்டு வரச் சென்றபோது அமிர்தம் கொண்ட கடம் சிவலிங்க உருவெடுத்து அமிர்தகடேசர் என்று பெயர் வந்தமைந்தது. தலம் திருக்கடவூர் என வழங்கப் பெற்றது.

அனுட்டானம் முடித்துத் திரும்பிய அசுரர்களும் தேவர்களும் மீண்டும் அமிர்தம் வேண்டுமெனப் பிரார்த்திக்க, பிரம்மன் இறைவனுடன் இறைவியையும் சேர்த்துப் பிரார்த்திக்கக் கூற, பிரார்த்தனைக்காக விஸ்வகர்மா அழகே உருவான அம்பாளைச் சிருஷ்டி செய்தார். அவ்வம்பாளே 'அபிராமீசுவரி'. அம்மையப்பருக்கு உரிய பிரார்த்தனைக்குப் பின்பு அமிர்தத்தை அம்ருதபுஷ்கரணி தீர்த்தத்தில் நடுவில் வைக்க, மீண்டும் அமிர்தம் மறைந்துவிட்டது. இம்முறை அதனை எடுத்து மறைத்தது சிவபெரு

ஷானின் மகனான மகாகணபதி. விக்னேசுவரனை வணங்கி காரியங்களைத் தொடங்கினால்தான் வெற்றி உண்டாகுமெனக் கூற, தேவர்களும் அவரை வணங்கினர். அமிர்தம் பெற்று இறைவனின் அருளையும் பெற்றனர். அமிருதத்தை விளையாட்டாக மறைத்த காரணத்தால் சோர விக்னேசுவரர் என்றும் கள்ள வாரணர் என்றும் அழைக்கப் பெறுகின்றார்.

**அட்ட வீரட்டம்;**

சிவபெருமான் பக்தர்களின் இடர் களை வதற்கெனவே தோன்றி வீரச் செயல் புரிந்த தலங்கள் எட்டு. வீர அட்ட தானம் எனவும் வீரம் ஸ்தானம் எனவும் பிரித்துப் பொருள் கூறுவர். எட்டு வீரட்டானங்களைக் குறிக்கும் பழைய பாடல் :

''பூமன் சிரங்கண்டி அந்தகன் கோவல், புரம் அதிகை
மாமன் பறியல், சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் குறுக்கை, யமன் கடவூர் இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே''

என்பதாகும். அட்ட வீரட்டங்களில் திருக்கண்டியூர்-பிரம்மன் தலையைக் கொய்தது. திருக்கோயிலூர்-அந்தகாசுரனைக் கொன்றது. திருவதிகை - திரிபுரத்தை எரித்தது. திருப்பறியலூர்-தக்கன் தலையைக் கொய்தது. திருவிற்குடி-சலந்தராசுரனைக் கொன்றது. வழுவூர் - யானையை உரித்தது. திருக்குறுக்கை-காமனை எரித்தது. திருக்கடவூர்.- எமனை உதைத்த தலமாகும்.

மிருகண்டு முனிவர் பல வருடங்கள் பிள்ளைக்காகத் தவமிருக்க இறைவனும் பதினாறு ஆண்டுகளே வாழக் கூடிய மதி நிறைந்த பிள்ளை வேண்டுமா, நூறு ஆண்டுகள் வாழக் கூடிய மதியற்ற பிள்ளை வேண்டுமா!'' என்று கேட்டார். மிருகண்டு முனிவரும், 'பதினாறு ஆண்டுகள் வாழக்கூடிய மதிநிறைந்த பிள்ளையே வேண்டும்' என்றார். அப்பிள்ளை தன் மதியால் விதியை வென்று ஆயுளைவிருத்தி செய்து கொள்வான் என்ற நம்பிக்கையால். அவருக்கு மார்க்கண்டேயரும் வந்து பிறந்தார். அவர் அனுதினமும் அமிர்தகடேசுவரரை வணங்கி வந்தார். பதினாறு ஆண்டுகள்நிறைவு பெற்றவுடன் மார்க்கண்டேயரைக் கொண்டு செல்லக் காலன் வந்தான். மார்க்கண்டேயர் மிரண்டு சிவலிங்கமான அமிர்தகடேசுவரரைக் கட்டிப் பிடித்துக் கொண்டார். காலன் பாசக் கயிற்றை வீச, அக்கயிறு மார்க்கண்டேயருடன் அமிர்தகடேசரையும் சேர்த்துப் பிணைத்தது. சிவலிங்கம் பிளவுபட்டு அதனின்று அம்மையப்பர் தோன்றி, காலனை இடக்காலால் உதைத்து சம்காரம் செய்து மார்க்கண்டேயருக்கு 'என்றும் பதினாறு வயது' (சிரஞ்சீவி) எனும் பேற்றையும் அளித்தார். பாலனுக்காக இடக் காலால் காலனை உதைத்ததால் பாலாம்பிகை சமேத காலசம்கார மூர்த்தியானார். காலசம்கார மூர்த்தி சந்நிதி அமிர்தகடேசுவரர் சந்நிதிக்கு அருகில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. இங்குள்ள மகாம்ருத்யுஞ்சய யந்திரம் அகாலமரணத்தைப் போக்கவல்ல சக்திவாய்ந்த பீஜாட்சரங்களைக் கொண்டது. இறைவனே அமிர்தகட வடிவான காரணத்தாலும் மார்க்கண்டேயர் பூஜித்து அகால மரணத்தைப் போக்கவல்ல மஹாம்ருத்யுஞ்ஜய யந்திரம் அமையப் பெற்றதாலும் காலனை அமிர்தகடேசுவரர் சம்கரித்த காரணத்தாலும் இங்கு பக்தர்களின் தீர்க்கமான ஆயுளை வேண்டி மணிவிழாக்கள், (சஷ்டியப்த பூர்த்திகள்) நிறையவே கொண்டாடப்படுகின்றன.

**கோயில் அமைப்பு**

மேற்கு நோக்கிய ஆலயம், பஞ்சப்பிராகாரங்கள் கொண்டது. மேற்புறமும் கீழ்ப்புறமும் ராஜகோபுர வாயில்கள் உள்ளன. கோயிலின் மூலஸ்தான சந்நிதானம் மேற்கு நோக்கிய அமிர்தகடேசுவரர் சந்நிதி,அச்சந்நிதியின் வலப்பக்கம் தெற்கு நோக்கி காலசம்கார மூர்த்தி சந்நிதி. அர்த்த மண்டபத்தின் இடப்பக்கம் கிழக்கு நோக்கி கள்ள வாரணப் பிள்ளையார் சந்நிதி அமைந்து உள்ளது.

உட்பிராகாரத்தில் வள்ளி தெய்வானை சமேதராக ஷண்முகநாதர் சந்நிதி. மகாலட்சுமி சந்நிதி. சிவகாமி அம்பாள் சமேதராக ஸ்ரீமன் ஆனந்த நடராஜ மூர்த்தி சந்நிதி, பிச்சாடனர் சந்நிதி. வில்வவனேசுவரர் சந்நிதி தட்சிணாமூர்த்தி சந்நிதி ஆகியவை அமைந்துள்ளன.

அபிராமி அம்பாளுக்குத் தனிச் சந்நிதி வெளிப்பிராகாரத்தில் கிழக்குப் பார்த்து அம்மன் சந்நிதியின் வெளிப்பிராகாரத்தில் சரஸ்வதி சந்நிதி அமையப் பெற்றிருக்கின்றது.

**கோயிலின் விழாக்கள்**

அன்றாட பூஜைகள் தவிர ஒவ்வோர் ஆண்டும் கார்த்திகை மாதம் ஒவ்வொரு சோமவாரத்தன்றும் அமிர்தகடேசுவரருக்கு 1008 சங்காபிஷேகமும் பஞ்ச மூர்த்தி புறப்பாடும் நடைபெறுகின்றது. சித்திரை மாதம் காலசம்கார மூர்த்தி திருவிழா நடைபெறுகின்றது. அபிஷேகம், திருக்கல்யாணம், காலசம்கார விழா, சுவாமி வீர நடனம் அனைத்தும் இத் திருவிழாக் காலத்தில் இடம் பெறுகின்றன.

அபிராமி அம்மனுக்குப் பிரதான வைபவம் ஆடிப்பூரம். பிரதி ஆடி வெள்ளி, தை வெள்ளி வசந்த நவராத்திரி, சாரதா நவராத்திரி விழாக்கள் உண்டு. இது தவிர, அமாவாசை அன்று என்ன திதி என்று சரபோஜி மன்னன் வினவியபோது பௌர்ணமி என்று தன்னையறியாது கூறிய பக்தர் அபிராமி பட்டரின் உயிரை காக்கத் தமது தாடங்கத்தை வானில் வீசி, பௌர்ணமி நிலவினைத் தோன்றச் செய்தாள் என்பது வரலாறு. இதனைக் குறிப்பிட்டுக் கொண்டாட தை அமாவாசை விழாவும் கோலாகலமாகக் கொண்டாடப் பெறுகின்றது. திருக்கடவூர், பக்தர்களுக்காக இறைவனும் இறைவியும் அருள்புரியும் விசேஷம் பொருந்திய புண்ணியத் தலமாகிறது. இத்தலத்தை அனைவரும் சென்று அன்னை அபிராமியைத் தரிசித்து சகல செல்வங்களையும் பெறவேண்டுமாறு வேண்டுவோம்.

# அறநிலையத் துறையின் பொற்காலம்

பேராசிரியை
**திருமதி மரியம் உல் ஆசியா**
அரவாக்குறிச்சித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

*மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலம் அறநிலையத் துறையின் பொற்காலம் என்பதை அரவாக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியை திருமதி மரியம் உல் ஆசியா அவர்கள் சட்டமன்றத்தில் எடுத்து விளக்கிய உரை இங்கு நம் திருக்கோயில் வாசகர்களுக்காக மகிழ்வுடன் வழங்கப்படுகிறது.*

இந்து சகோதரனும் இஸ்லாமிய சகோதரனும் இணைந்து வாழ்கிற நேச வாழ்வில்தான், இந்தியாவின் ஐக்கியம் உறுதிபடும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கைப் பிடிப்பு மிக்கவராக, 'பலனை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்' என்ற பகவத் கீதையின் சத்திய வாசகங்களின்படி, மக்கள் நலனையும், தேச நலனையும் உயிர் மூச்சாகக் கொண்டு சமய நல்லிணக்கத்திற்கும், மனித நேயத்திற்கும் எடுத்துக்காட்டாகச் செயல்பட்டு வரும் தமிழக முதலமைச்சர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வகுத்துத் தந்த நெறிமுறைகளைப் பின்பற்றி, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதில் ஆனந்தமடைகிறேன்.

எல்லா மதங்களும் ஒரே இலக்கை நோக்கிச் செல்லும் வெவ்வேறு பாதைகள்தான் என்ற கருத்தை விவேகானந்தர் தமது சிகாகோ உரையில் கூறினார்.

பல நதிகள் பல திசைகளில் ஓடுகின்றன. முடிவில் கடலில் கலக்கின்றன. அதைப்போல் பல வழிகளில் இறைவனை வழிபடுகிறோம். இறைவனை அடைய முயற்சிக்கிறோம் என்றார் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்.

இந்துக்கள் இஸ்லாமியப் பள்ளி வாசல்களுக்கும், இஸ்லாமியர்கள் இந்துக் கோயில்களுக்கும் இயன்றவரை கொடைகள் அளித்துள்ளனர் என்பதைச் செப்பேடுகளிலும், கல்வெட்டுகளிலும் காண முடிகிறது.

தஞ்சை மாவட்டம், கும்பகோணத்திற்கு அருகிலுள்ள கொடநாட்டுக் கருப்பூர் கோயிலுக்கு இஸ்லாமியர் நிலங்களைக் கொடையாக அளித்துள்ளனர். இராமநாதபுரம் மாவட்டத்தில் மாணிக்கவாசகரால் பாடப்பெற்ற தலமான உத்திரக்கோசமங்கை கோயிலில் உலோகத்தாலான திருவாசி ஒன்றை இஸ்லாமியப் பெருமக்கள் செய்து அளித்துள்ளனர். திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் இன்றும் வழிபாட்டில் உள்ள உமா மகேஸ்வரர் திருமேனியை அன்வருதீன்கான் என்னும் இஸ்லாமியர் செய்

தளித்துள்ளார். திருச்சி மாவட்டம் இலுப்பூர் பெருமாள் கோயிலின் கொடிக் கம்பத்தை அளித்தவர் சையத் அலிகான் என்னும் இஸ்லாமியர் என்பதை அறிகிறோம். மதுரை நாயக்க மரபில் வந்த மங்கம்மாளும், மீனாட்சி அரசியும் பள்ளிவாசல்களுக்கு கொடைகள் அளித்துள்ளனர்.

பாண்டியர் காலத்தில் பல இந்து அறநிலையங்களுக்கு முஸ்லீம்கள் நிர்வாகிகளாக இருந்தனர். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு சையது இஸ்மாயில் என்பவர் நிர்வாகியாக இருந்தார்.

பண்டைய வரலாற்றைப் பின்பற்றி புதிய வரலாறு படைக்க புது யுகம் காணப்போராடும் முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் காலத்தில் சமய, நல்லிணக்கத்திற்கு தமிழக மக்கள் எடுத்துக் காட்டாக விளங்குகிறார்கள்.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஆட்சி புரிந்த சோழர் காலம் தமிழகக் கோயில் வரலாற்றில் ஒரு பொற்காலமாகக் கருதப்பட்டது. அதைப்போல 'சமயம் ஆறும் போற்றும் தலைவி' என்ற அபிராமி அந்தாதியின் அற்புதமான தொடருக்குப் பொருத்தமான ஒப்பற்ற தலைவியாகத் திகழும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் காலம் இந்து சமய அறநிலையத்துறையின் மகத்தான பொற்காலமாகும்.

இன்றைக்கு அறம் வளர்க்கும் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் திருக்குட நீராட்டு விழா காணாத ஆலயமில்லை; திருப்பணி காணாத திருக்குளம் இல்லை; நந்தவனம் இல்லாத திருக்கோயில் இல்லை; தங்கத் தேர் இல்லாத திருக்கோயில் இல்லை என்று எல்லோரும் போற்றும்படியாக அறநிலையத் துறை சீரோடும் சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருப்பதைச் சுட்டிக் காட்டுவதில் அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே தென்காசி விசுவநாதர் ஆலயத்தைக் கட்டிய அரிகேசரி பராக்கிரம பாண்டியன், அந்த ஆலயத்திலே கல்வெட்டுக்களிலே சில பாடல்களைப்பொறித்து வைத்திருக்கின்றான். அந்தப் பாடல்களிலே அந்த மாமன்னன் திருக்கோயில் திருப்பணி பற்றி ஒரு அற்புதமான கருத்தைச் சொல்லி இருக்கிறான்.

இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு நான் அமைத்த இத்திருக்கோயில், கால வெள்ளத்தில் பழுது அடைய நேர்ந்திடலாம். அவ்வாறு இவ்வாலயம் பழுதுபடும் நேரத்தில் இத்திருக்கோயிலை யாராகிலும் திருப்பணி செய்து சீரமைப்பார்களானால், அத்தகைய சான்றோர்களின் திருப்பாதங்களை இப்போதே நான் என் தலைமேல் தூக்கி வைத்துப் போற்றிச் சிறப்பிக்கின்றேன் என்பதாக அந்த மாமன்னன் திருக்கோயில் திருப்பணி செய்வதன் சிறப்பைக் கல்வெட்டுப் பாடல்களாகப் பொறித்து வைத்துச் சென்றிருக்கிறான்.

பராக்கிரம பாண்டியன் எத்தகைய அருளுணர்வோடு ஆலயத் திருப்பணியில் ஈடுபட்டானோ, அத்தகைய அருளுணர்வோடு ஆலயத் திருப்பணிகளை ஆற்றி வருகிறார்கள் ஆற்றல்மிகு (மேசையைத் தட்டும் ஒலி) நம் முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

இன்றைக்கு அறநிலையத்துறை ஆற்றி வரும் அறப்பணிகள் எல்லாவற்றிலும் தலைசிறந்த திருப்பணியாக விளங்குவது திருக்கோயில்கள்தோறும் திருவிளக்கேற்றும் ஒரு காலப் பூஜை எனும் ஒப்பற்ற திட்டமாகும்.

இறைவனை அடைய சமயங்கள் எனபன வழிகள். எந்த வழியின் வழியாகவும் இறைவனைச் சென்று அடையலாம். அதிலே வேற்றுமை வேண்டாம். சண்டைகள் வேண்டாம் என்பதை நம் முன்னோர்கள் கற்பித்துச்சென்று இருக்கின்றார்கள். இதை நம் இளைஞர்களுக்குப் போதிக்காத காரணத்தால்தான் சில நேரங்களில் வீணாகச் சமயப் பூசல்கள் உண்டாகிவிடுகின்றன. சமயப் பூசல்கள் தவிர்க்கப்பட வேண்டுமானால், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற தத்துவம் இளைஞர்களுக்கு உணர்த்தப்பட்டாக வேண்டும். இந்த அடிப்படையில்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 'ஆன்மீகக் கல்வித் திட்டத்தை' திருக்கோயில்களில் தமிழ் புத்தாண்டு முதலாகத் தொடங்கி ஒவ்வொரு வாரமும் வகுப்புகளை நடத்த ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். அங்குப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வகுப்புகளின் முடிவில் தாயுள்ளத்தோடு அறுசுவை உணவு வழங்கவும் ஆணை பிறப்பித்திருப்பது பாராட்டத்தக்க ஒரு பயனுள்ள திட்டம் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சமயக் கல்வியை பள்ளிப் பாடத் திட்டத்தில் இடம் பெறச் செய்ய வேண்டும். இளமைக் காலத்திலிருந்தே சமயக் கல்வியும், ஒழுக்கக் கல்வியும் முறையாகப் போதிக்கப்பட வேண்டும். கடவுள் பக்தி, நாட்டுப்பற்று, மனித நேயம் இவைகளைக் குழந்தைகள் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும்.

நம் நாடு சுதந்திரம் பெற்றபின் மத்திய அரசு பல்வேறுகல்விக் குழுக்களை அமைத்தது. இவற்றில் 1948-ல் அமைக்கப்பட்ட இந்தியப் பல்கலைக் குழு, 1952-ல் அமைக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிக் கல்விக் குழு, 1959-ல் அமைக்கப்பட்ட பிரகாசம் குழு, 1964-இல் அமைக்கப்பட்ட கோத்தாரி குழு போன்றவை ஆன்மீக நெறிகளைக் கற்பித்தலின் அவசியயத்தை வற்புறுத்தி உள்ளன. 'சமயக் கல்வி

என்னும் பாடத் திட்டத்தில் ஒருவனுக்கு அவனது சமயக் கல்வி மட்டுமின்றி பிற சமயக் கோட்பாடுகளும் கற்பிக்கப்பட வேண்டும். மாற்றுக் கருத்துக்களை மதித்துப் போற்றும் பரந்த சமரச மனோபாவத்தை உருவாக்க இது உதவும்' என்று மகாத்மா காந்தியடிகள் கூறிய கருத்துக்களை நினைவில் கொண்டு உலகின் பல்வேறு சமயத் தத்துவங்களை அறிந்து கொள்ளவும், அவற்றை எல்லாம் சமமாக 'மதித்துப் போற்றவும் சமயக் கல்வி பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுகிறேன்.

பழமையான ஆலயங்களை நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் மூலம் தூய்மைப் படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

கோவில் நிர்வாகத்தில் பெண்களும் பங்கு கொள்ள அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்து நாட்டவர்களும் ஆகம விதி களைத் தெரிந்து கொள்ள வசதியாக கம்ப் யூட்டர் முறையில் ஆவணங்களை உருவாக்க வேண்டுகிறேன்.

தமிழக வரலாறு என்பது திருக் கோயில்கள்தான். அங்கு வரலாறு கல்வெட்டு களாக செப்பேடுகளாகக் காட்சித்தருகின்றன.

கோவில்கள் நமது செல்வம் ஆகும். இதைக் காப்பதன் மூலம் நமது கலை கலாச்சாரம் காப்பாற்றப்பட்டுப் பாதுகாக்கப்படும்.

நமது முன்னோர்கள் கோவிலைக் கட்டி அதன் பொருள்களைப் பாதுகாக்க பல்வேறு கமிட்டிகளையும் அமைத்தனர். கோவில்களில் சிலைகளைத் திருடுவதும்பண்டை காலத்திலும் இருந்துள்ளது. திருவாரூர் கோவிலில் 2 சிலைகள் திருடு போய்விட்டதாக அப்பொழுது மன்னராக இருந்த கிருஷ்ணதேவராயருக்கு புலவர் ஒருவர் தனது கிளி மூலம் தெரிவித்த தாகக் கூறப்படுகிறது.

எனவேதான் மன்னர்கள் கோவில்களில் நகைகள், பொருட்களைப் பாதுகாக்கவும் அதன் மதிப்புகளை அறியவும் பல பதிவேடு களைப் பயன்படுத்தி உள்ளனர்.

இந்த வகையில் குமரி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கோவில்களிலும் திருஆபரண பதி வேடு, பரணி பாத்திர பதிவேடு, பட்டு பரி வட்டம் பதிவேடு, பல்வகைப் பதிவேடு என 4 வகையான பதிவேடுகள் வைத்திருந்தனர்.

இந்தப் பதிவேடுகளின் நகல்கள் கண் காணிப்பாளர் அலுவலகத்திலும், துணை ஆணையர் அலுவலகத்திலும் உண்டு. இந்தப் பதிவேடுகளை கண்காணிப்பாளர் 3 மாதத் திற்கு ஒரு முறையும், உதவி ஆணையாளர் 6 மாதத்திற்கு ஒரு முறையும் திருஆபரண அதிகாரி ஒரு வருடத்திற்கு ஒரு முறையும் தணிக்கைச் செய்கிறார்கள்.

இந்த முறை குமரி மாவட்டம் தமிழகத் தோடு இணைந்தபோதும் கடைபிடிக்கப்பட்டு வந்தது.

ஆகவே குமரி மாவட்டத்தில் உள்ள 47 பெரிய கோவில்கள் உட்பட 592 கோவில் களிலும் தமிழகத்திலுள்ள முக்கிய கோவில் களிலும் இது போன்ற பதிவேடுகள் வைத்து முறையாக தணிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

குமரி மாவட்டத்தின் கோவில்களில் பல கோடி மதிப்புள்ள தங்கம் மற்றும் வைர நகைகள் உள்ளன. குமரி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கோவிலிலும் உள்ள நகைகள் எத் தனை! அதன் மதிப்பு மற்றும் எடை பற்றிய முழு விவரமும் திருவனந்தபுரத்தில் உள்ள மன்னர் அரண்மனை அலுவலகத்தில் உள்ளது. மேலும் குமரி மாவட்டத்திலுள்ள கோவில் களின் நகைகளின் படங்களை பாண்டிச்சேரி யிலுள்ள பிரெஞ்சு இந்திய இயல் கழகம் பாது காத்து வருகிறது.. இது போன்றவற்றை உட னடியாக வாங்கிப் பாதுகாக்க வேண்டுகிறேன். நகைகள் உள்ள கோவில்களில் நகைகள பாதுகாப்புக்காக ஆயுதம் ஏந்திய போலீஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டுகிறேன்.

கோவில்களில் திருட்டு நடைபெறுவதைத் தடுப்பதற்காக அனைத்துக் கோவில்களிலும் பொது மக்கள் பாதுகாப்புக் குழுக்களை அமைக்க வேண்டுகிறேன்.

மதுவிலக்கு வரதட்சணை கொடுமைகளை ஒழிப்பதற்காக தனி காவல்துறை பிரிவுகள் இருப்பதைப்போல் கோவில் கொள்ளைகளைத் தடுப்பதற்காக காவல் துறையில் தனிப்பிரிவு அமைக்குமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள் கிறேன்.

மேலும் கோவில் நகைகளைப் பாதுகாக்க பறக்கும் போலீஸ் படையையும் ஏற் படுத்த வேண்டுகிறேன். கோவில்களில் நகை கள் அனைத்துக்கும் பாதுகாப்பு கருதி காப்பீடு செய்ய வேண்டுகிறேன்.

கோவில் நகைகள் அனைத்தும் புகைப் படம் எடுத்து பாதுகாப்பாக வைக்க வேண்டு கிறேன்.

மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவில் குளத் திற்கு மந்தைவெளி, பட்டினப்பாக்கம் போன்ற பகுதிகளில் இருந்து மழை நீரை குழாய்கள் மூலம் கொண்டு வர வேண்டுகிறேன்.

அதே போன்று திருவல்லிக்கேணி பார்த்த சாரதி கோவில் குளத்தில் தற்போதுள்ள கான் கிரிட் கடப்பை கற்களை அகற்றிவிட்டு களிமண் மற்றும் மணல் போட்டு குழாய்கள் மூலம் தண்ணீர் விடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கோவில்களுக்குப் பன்னிரண்டு ஆண்டு களுக்கு ஒரு முறை கும்பாபிசேகம் நடத்த வேண்டும் என்பது ஆகம விதி. கும்பாபிஷேகம்

நடத்தப்படாத கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க் வேண்டு கிறேன்.

மதுரை மாநகரில் கடைசங்க காலப் பாண்டிய மன்னர்களாலும், பிற்கால நாயக்க மன்னர்களாலும் கட்டி முடிக்கப்பட்ட அருள் மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோவிலுக்கு நீண்ட காலமாக கும்பாபிஷேகம் நடத்தப் படாமல் இருப்பதால் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடத்து மாறு வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மற்றும் புகழ் பெற்ற கோவில் வளாகங்களின் புத்தக விற்பனை கூடங்கள் திறக்கப்பட வேண்டுகிறேன். அங்கு கோவில் களஞ்சியம் உட்பட சமய புத்தகங்கள் விற் பனை செய்யலாம்.

பழனி முதலான பெரிய கோயில்கள் சில வற்றில் மட்டுமே, ஆண்டிற்கு ஒருமுறை நடத்தப்பட்டு வரும் இலவச திருமணங்களை, மாதந்தோறும் நிகழ்த்தும் வண்ணம் இத்திட் டத்தைவிரிவுபடுத்த வேண்டுகிறேன். அனைத்து மாவட்டங்களிலுமுள்ள அனைத்து முக்கிய திருக்கோயில்களும் இத்திட்டத்தைச் செயற் படுத்த வேண்டுகிறேன்.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று வற்புறுத்திய பேரறிஞர் அண்ணா அவர்கள் இத்தகைய ஏழையெளியோர்க்கு பயன்படும் சமுதாய நலத் திட்டங்களைத் திருக்கோயில்கள் செயல்படுத்துமானால், திருக்கோயில்களில் மகத்துவம் கூடுமே அன்றிக் குறையாது என்று கருத்துரை வழங்கியிருப் பதை இங்கே நினைவுப்படுத்த கடமைப்பட்டி ருக்கிறேன்.

செய்தித் துறைக்கு என்று தமிழரசு அச்ச கம் ஒன்று இயங்கி வருவதைப் போல, அற நிலையத் துறைக்கு என்று திருக்கோயில் அச்ச கம் ஒன்றை அமைக்க வேண்டுகிறேன். இவ் வாறு 'திருக்கோயில் அச்சகம்' அமைக்கப்படு மானால் தமிழகத்திலுள்ள பல பெரியகோயில் களுக்கு வேண்டிய சுவரொட்டிகள், திருவிழா அழைப்பிதழ்கள் மற்றும் அர்ச்சனை டிக்கெட் புத்தகங்கள், கோவிலுக்குத் தேவையான பதி வேடு புத்தகங்கள் போன்றவற்றை 'திருக்கோ யில் அச்சகத்திலேயே' அச்சிட்டுக் கொள்வது எளிமையாக இருக்கும். மேலும் அறநிலை யத்துறை வெளியிட்டு வரும் தலைசிறந்த ஆன்மீக இதழான 'திருக்கோயில்' இதழை மேலும் பொலிவுடன் உரிய நேரத்தில் வெளிக் கொணர்ந்து, பல்லாயிரக்கணக்கான மக்கள் படித்துப் பயன்பெற செய்வதற்கும் அந்த அச்சகம் ஏதுவாக இருக்கும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தற்போது அறநிலையத் துறையில் பணி புரியக்கூடிய நிர்வாக அதிகாரிகள், பணியா ளர்கள் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அறநிலையத் துறை சட்ட விதிப் புத்தகங்கள், தேவையான சமய அறிவுப் புத்தகங்கள் பல வற்றையும் அச்சிட்டு வழங்குவதற்கும், மேலும் 'மாண்புமிகு முதலமைச்சர் ஆன்மீகக் கல்வித் திட்டம்' அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருப்ப தால் அத்திட்டத்தில் சேர்ந்து பயிலும் மாணவ மாணவியருக்குப் பயன்படத்தக்க நூல்களை மலிவு விலையில் அச்சிட்டு வழங்குவதற்கும் 'திருக்கோயில் அச்சகம்' அமைக்கப்படுமானால் அது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

திருக்கோயில்களுக்கு வேண்டியகுங்குமம் திருநீறு, பஞ்சாமிர்தம் முதலான பல அவசிய பொருட்களை எளிமையாகத் தயாரித்து மலிவு விலையில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுகின்றேன்.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சோழ மண் டலத்தில் மாபெரும் முதல் அமைச்சராக இருந்து பின் அப்பதவியைத் துறந்து, பெரிய புராணம் எனும் அடியார் வரலாறு கூறும் ஒப் பற்ற சரித்திர நூலினைச் செய்து அழியாப் புகழ்கொண்டு விளங்கும் சேக்கிழார் பெரிய புராணத்தில் மங்கையர்க்கரசி என்று திரு மகளைப் போற்றும் பொழுது 'மங்கையர்க்குத் தனியரசி எங்கள் குல தெய்வம்' என்று போற்றியிருக்கின்றார். இந்த ஒப்பற்ற வரிகள் ஒப்பற்ற நம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு பொருந்தக்கூடிய வரிகள் என்பதை இந்நேரத்தில் சுட்டிக்காட்டுவதில் அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையை தட்டும் ஒலி).

மங்கையர்க்குத் தனியரசியாகிய நம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் **'சேக்கிழார் கோட்டம்'** ஒன்று அவர் பிறந்த குன்றத்தூரில் அமைக்கவேண்டுகிறேன்.

சைவக் கோவில்கள் அனைத்திலும் ஓது வார்கள் நியமிக்க வேண்டுகிறேன். முதல் கிரேடு கோயில் ஊழியர்களுக்கு வழங்குவது போன்ற ஊதியம் ஓதுவார்களுக்கும் வழங்க வேண்டுகிறேன், ஓதுவார்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குமாறு வேண்டுகிறேன். ஓதுவார் களுக்கும் கலைமாமணி விருதுகள் வழங்கப்பட வேண்டும். திருமுறை பயிற்றுவிப்பதற்காகவும் ஓதுவார்களுக்கு பயிற்சியளிப்பதற்காகவும் தேவார இசைப்பள்ளி ஒன்றை நிறுவ வேண்டு கிறேன். கிராமங்களிலுள்ள கோவில்களில் அர்ச்சகர்களாகப் பணிபுரியும் பூசாரிகளுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டுகிறேன்.

தமிழகக் கலாசாரப் பண்பாட்டைப் பறை சாற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள தாயு மானவர் ஸ்வாமி திருக்கோவில் அமைந்துள்ள மலைக்கோட்டைக்கு 'கேபிள் கார்' அமைக்கு மாறு வேண்டுகிறேன்..

# உலகளந்த பெருமாள்

புலவர் முத்து எத்திராசன், எம்.ஏ.

'மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான் தாயது எல்லாம் ஒருங்கு''—குறள்

''தன் அடியினாலே எல்லா உலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்பு முழுவதை யும் முயறசியுடைய அரசன் பெறுவான்'' என்பது இக்குறளின் கருத்து.

இக்குறளில் கூறப்படும் உலகம் முழுவதை யும் அளந்த இறைவன் யார் எனில் அவன் நான் வைணவர் போற்றும் திருமால். அத்திருமால் எடுத்த அவதாரங்கள் பத்து. அவற்றுள் ஒன்று வாமன அவதாரம். இது ஐந்தாவது அவதார மாக வைக்கப்பட்டுள்ளது.

இதைத்தான் திருக்குறளுக்கு உரை எழுதிய பரிதியார் காளிங்கர் போன்றவர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

திருக்குறளிலும் தாமரைக் கண்ணான் உலகு (1103) எனக் கூறுவது திருமால் இருக் கும் உலகமாகிய வைகுந்தமாகும். மேலும் திருமால் மார்பில் வீற்றிருந்த திருமகளைச் செய்யாள் (84) செய்யவள் (167) திரு (179, 519, 920, 1123) தாமரையினாள் (617) எனப் பலவாறு எடுத்துக் கூறுவதன் மூலம் திருவள்ளு வர் குறிப்பிடும் .'அடியளந்தான்' என்பவன் திருமால் என்பது உறுதியாகிறது.

இனி திருமால் அடியளந்த இவ்வர லாற்றை தமிழ் இலக்கியங்கள் எவையெவை எடுத்துக் கூறுகின்றன என்பதைக் காண்போம்,

சங்க இலக்கிய நூலான பத்துப்பாட்டில் உள்ள முல்லைப்பாட்டு இச்செய்தியை மிக அழகாக மழைக்காட்சியின் மூலம் நமக்கு எடுத்துக் கூறுகிறது. இந்நூலை எழுதிய . பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் முல்லை நிலத்தில், கார் காலத்தில் மாலை நேரத்தில் ஏற்படும் மழையைப் பற்றிக் கூறு வதைக் கண்டால் இவ்வரலாறு அவர் காலத் திற்கு முனனே ஏற்பட்டது என அறிவோம்.

இனி அவர் காட்டும் வருணனையைக் காண்போம். மாலைநேரம். கார்காலம். அக் காலத்தே வானத்தில் மேகங்கள் தோன்றுவது இயல்பு. அவை தோன்றுகின்ற போதே இருண் டும் திரண்டும் மழையோடும் காட்சியளிக்கின் றன. அவ்வாறு வானத்தே மேகத்திலிருந்து தாரையாகப் பொழியும் காட்சியைத் திருமால் வாமன அவதாரம் எடுத்து மாவலி என்ற மன்னன் முன் நின்றபோது அவன் நீரை தாரை வார்த்துக் கொடுக்கையில் அதைப் பெற்றுக் கொண்ட திருமால் தான் முன்பிருந்த வடி வினை விட்டுப் பேருரு கொண்டது போல மேகங்கள் மழையைப் பொழிந்தவாறு திரண் டன என்பதை

'நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை''

என்று ஒன்று முதல் ஆறுவரிகளில் எடுத்துக் காட்டியுள்ளார். இதன் மூலம் அவர் காலத் தில் திருமாலின் வாமன அவதாரம் மக்களி டையே வழங்கியசெய்தியாக இருந்திருக்கிறது.

இதில் திருமாலின் இரண்டு கைகளிலும் சங்கு, சக்கரம் பெற்றிருப்பதையும் மார்பில் திருமகள் வீற்றிருந்த செய்தியை மட்டும் எடுத்துக் கூறியுள்ளார். மற்றைய செய்தியை நமக்கு எடுத்துக் கூறவில்லை.

அடுத்துள்ள நூலான பெரும்பாணாற்றுப் படையில் திருமால் உலகத்தை அளந்ததையும் அவர் மார்பில் திருமகள் வீற்றிருந்ததையும்,

''இருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன்''-(பெரும்பாணாற்: 29-30)

என்னும் வரிகளில் நமக்கு எடுத்துக் கூறியுள் ளார்.

இதில் முந்நீர் வண்ணனாகிய இறைவன் பெரிய நிலத்தை அளந்ததை மட்டும் கூறி யுள்ளார். மற்றவையெல்லாம் சொல்லவில்லை. இதிலிருந்து இவ்வரலாறு முழுமையும் அக் கால மக்களுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. கற்றார் போற்றும் கலித்தொகையில் உள்ள நெய்தற்கலியில் காணும் ஏழாவது பாடல், கடல்நீர் நீலநிறம் பெற்று விளங்குவதைக் கண்ணனுக்கும் அலை தவழும் கடற்கரை வெண்மைநிறம் பெற்று விளங்கியதை பலராமனுக்கும் உவமையாக எடுத்துக் கூறுகிறது. அப்பொழுது கண்ணன்

செயலாகக் கூறுவது உலகம் மூன்றையும் தன் திருவடியாலே அளந்த இச்செய்தியை மட்டுமே இதன் மூலம் கண்ணன், திருமாலின் மறு அவதாரம் என்பதுடன் திருமாலும் கண்ணனும் ஒன்றே என்ற எண்ணம் அக்கால மக்களிடம் இருந்தது தெரிகிறது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான நான் மணிக்கடிகையில் உள்ளஇரண்டாம் பாடல் கண்ணனின் பெருமைகளைக் கூறுகின்ற போது உலகளந்த செய்தியே முக்கியமாகக் கூறப்படுகிறது. இதை

'அடியினால் முக்கால் கடந்தான் முழு நிலம்' என்று அப்பாடல் வரியின் மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

இதற்கு உரையெழுதிய உரையாசிரியர், 'ஒரு காலால் நிலவுலகத்தையும் மற்றொரு காலால் விண்ணுலகத்தையும் கடந்து பின்னொரு காலால் மாபலியின் தலைமேல் வைத்து கீழுலகத்தையும் அளந்தனன் கண்ணன்,' என்று கூறியுள்ளார்.

அடுத்து பழமொழி நானூறு என்னும் நூலில் உள்ள 183-ஆம் பாடல், 'குற்றமுள்ள காரியத்தைச் செய்யத் தொடங்குபவர் தாமே தமக்குத் துன்பங்களை விளைவித்துக் கொள்வார்' என்பதற்கு உதாரணமாக மாவலியின் வரலாற்றை எடுத்துக் காட்டியுள்ளது.

''ஆ அம் எனக் கெளிதென்றுலகம் ஆண்டவன்
மேஎந் துணையறியான் மிக்குநீர் பெய்திழந்
தான்
தோஒ முடைய தொடங்குவார்க் கில்லையே
தா அம் தரவாரா நோய்''
என்பது அப்பாடல்.

இதில் மாவலியின் வரலாறு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. 'துணையறியான்' என்பதற்கு உரையாசிரியர் சுக்கிரன் என்று குறிப்பிட்டுள்ளது மாவலியின் அமைச்சன் பெயராகும்.

மேலும் 177-ஆம் பாடலில் 'கொற்றப்புள் ஊர்ந்துலகம் தாவின அண்ணல்' என்னும் வரி 'திருமால் கருடப்பறவையின் மீதமர்ந்து உலகம் கடந்தான்' என்பதாக உள்ளது. இதுவும் திருமாலின் உலகளந்த வாமன அவதாரமே ஆகும்.

திருக்குறளைப் பாராட்டும் திருவள்ளுவமாலை பாடலொன்று,

'மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால் ஞாலம் முழுதும் நயந்தளந்தான்' என்று குறிப்பிடப்படும் வரிகள் திருமால் உலகளந்த வரலாறாகும்.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம், இச்செய்தியை ஆய்ச்சியர் பாடும் குரவைப் பாட்டில் கூறுகிறது.

அவை வருமாறு,

'மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா
தாவிய சேவடி' என்றும் [வகைமுடியத்

'திரண்டமரர் தொழுதேத்துந் திருமாலின்
செங்கமல
இரண்டடியான் மூவுலகும் இருள்தீர
நடந்தனையே''.
என்றும் கூறியுள்ளன.

இதற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார், நெடுமால் என்பதற்கு 'அந்தரவானத் தெம்பெருமான்'என்று பொருள் கூறியுள்ளார்.

உலகளந்த பெருமாள் என்பதை 'அந்தர வானத் தெம்பெருமான்' என்றும் அழைத்துள்ள செய்தியை நாம் இதன் மூலம் அறிகின்றோம்.

அடுத்த காவியமான மணிமேகலை

'நெடியோன் குறளுரு வாகி நிமிர்ந்துதன்
அடியிற் படியை அடக்கிய அந்நாள்
நீரிற்பெய்த மூரிவார் சிலை
மாவலி மருமான் சீர்கெழு திருமகள்
சீர்த்தி யென்னும் திருத்தகு தேவியொடு
போதவிழ் பூம்பொழில் புகுந்தனன்'' என்னும்

வரிகளில் திருமால் உலகளந்ததை மட்டுமல்லாது மாவலியின் மகளாகிய சீர்த்தி என்னும் பெயருடைய தேவியுடன் திருமால் சோலையில் புகுந்த செய்தியையும் நாம் காணுகின்றோம்.

இதன் மூலம் மாவலியின் மகள் சீர்த்தி என்பவள் என்பதை நாம் அறியமுடிகிறது.

இனி ஆழ்வார்கள் பாடிய பாடல்களைக் காண்போம்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து தமிழ் நாட்டில் பக்தி இயக்கம் வளர ஆரம்பித்தது. நாயன்மார்களைப் போல ஆழ்வார்களும் வைணவ பக்தி தமிழ்நாட்டில் வளர அரும்பாடு பட்டனர். அப்படிபாடுபட்ட ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். அவர்களில் ஒருவரான பெரியாழ்வார், திருமாலைப் பற்றிப் பாடுகின்றபோது அவருடைய அவதாரங்களில் ஒன்றான வாமன அவதாரத்தைப் பற்றிப் பாடியுள்ளனர்.

அப்பாடல்கள் வருமாறு:

''மிக்க பெரும்புகழ் மாவலி வேள்வியில்
தக்கது தன்றென்று தானம் விலக்கிய
சுக்கிரன் கண்ணைத் துரும்பாற் கிளறிய
சக்கரக் கையன்''

''ஒரு குறளா யிருநிலம் மூவடிமண் வேண்டி யுலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி யொன்றுந் தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த தாடாளன்'' என்பன.

இப்பாடல்களில், தானம் கொடுப்பதைத் தடுத்த சுக்கிரன் கண்ணைத் துரும்பினால் குத்திக் குருடாக்கியதையும், திருமால் மாவலியைச் சிறையில் அடைத்ததையும் காணலாம். இச்செய்திகள் புதியன. இதற்கு முன் கண்ட பாடல்களில் இக்குறிப்புக்களை நாம் கண்டதில்லை.

நம்மாழ்வாரும், 'அன்று ஞாலம் அளந்த பிரான்' என்று திருமால் உலகளந்த செய்தியை ஒரு வரியில் கூறியுள்ளார். அடுத்து திருமங்கையாழ்வார்,

'தூய அரியுருவிற் குறளாய்ச் சென்று
மாவலியை
ஏயானிரப்ப மூவடிமண் இன்றேதா என்றுல
தாயான் காயா மலர் வண்ணன்'' [கேழும்
என்றும், (பெரிய திருமொழி)

'பொங்கிலங்கு புரிநூலும் தோலும் தாழப்
பொல்லாத குறளுருவாய்ப் பொருந்தா
வாணன்
மங்கலம் சேர் மறைவேள்வி யதனுள் புக்கு
மண்ணகலம் குறையிரந்த மைந்தன் கண்டீர்''

என்றும் (பெரிய திருமொழி)

'வந்து குறளுருவாய் நிமிர்ந்து
மாவலி வேள்வியில் மண்ணளந்த
அந்தணர் போன்றிவரார் கொலென்ன
அட்ட புயகரத்தேனென்றாரே''

என்றும், (பெரிய திருமொழி-2)

''கள்ளக் குறளாய் மாவலியை
வஞ்சித் துலகம் கைப்படுத்து
பொள்ளைக் கரத்த போதகத்தின்
துன்பம் தவிர்த்த புனிதன்''

என்றும், (பெரிய திருமொழி 5)

'பண்டிவ் வைய மளப்பான்
சென்று மாவலி கையில் நீர்
கொண்ட ஆழித் தடக்கைக்
குறளனிடம் என்பரால்'

என்றும், (பெரிய திருமொழி 5)

'மான் கொண்ட தோல்மார்வில் மாணியாய்
மாவலிமண்
தான் கொண்டு தாளால் அளந்த பெருமான்'

என்றும், (பெரிய திருமொழி-6)

## பட்டாடை வேண்டாம்

**எல்லோரும்-பெண்கள் உள்பட-பட்டு முதலான பகட்டுத் துணிகளைவிட்டு-கடைசித் தரமான வஸ்திரம்தான் வாங்குவது என்று வைத்துக் கொள்ள வேண்டும்.**

**—ஸ்ரீசந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள்**

'தானவன் வேள்விதன்னில் தனியே குறளாய்
நிமிர்ந்து
வானமும் மண்ணகமும் அளந்ததிரி விக்கிரமன்'

என்றும் பாடியுள்ளார். (பெரிய திருமொழி 9)

'திருமால் குறளுருவாய் வந்தபோது, அவன் மார்பில் நூலும் தோலாடையையும் அணிந்திருந்ததை எடுத்துக் காட்டியுள்ளார். குறளுருவாய் இருந்து பின்வானளாவதோன்றிய தோற்றத்தை 'திரிவிக்கிரமன்' என்னும் சொல்லால் சுட்டுகின்றார்.

பொய்கையாழ்வார் தாம்பாடிய இரண்டாம் திருவந்தாதியில்

'நின்றதோர் பாதம் நிலம்புதைப்ப நீண்ட
தோள்
சென்றளந்த தென்பர் திசையெல்லாம்-அன்று
கருமாணி யாயிரந்த கள்வனே' என்று பாடியுள்ளார். ஆண்டாளாகிய நாச்சியாரும் தம் திருமொழியில்,

'கொண்ட கோலக் குறளுருவாய்ச் சென்று
பண்டு மாவலி தன்பெரு வேள்வியில்
அண்டமும் நிலனும் அடியொன்றினால்
கொண்டவன்வரில் கூடிடு கூடலே' என்று
பாடியுள்ளார்.

மேலே காட்டப்பட்டுள்ள ஆழ்வார்களும் தாம் பாடிய பாடல்களில் முழுமையாகத் திருமால், மாவலியை வென்ற வரலாற்றைச் சரியாக எடுத்துக் கூறவில்லை. அரைகுறையாகவே நாம் அவ்வரலாற்றை அறிய வேண்டியவர்களானோம். இக்குறையை இவர்களுக்கெல்லாம் காலத்தால் பின்னர் தோன்றியகவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் ஓரளவு சரிசெய்துள்ளார்.

அவர் இவ்வரலாற்றைத் தமிழ் மக்கள் முழுமையாக அறிய வேண்டும் என்ற நோக்கத்தில் இராமாயணத்தில் உள்ள பாலகாண்டப் பகுதியில் விசுவாமித்திரர் வாயிலாகச்சொல்ல வைத்துள்ளார்.

இராம இலக்குமணர்களை அழைத்துக் கொண்டு விசுவாமித்திரர் மிதிலையை நோக்கி செல்லும் வழியில் சித்தாச்சிரமம் என்னும் சோலையைப் பற்றி இராமர் கேட்கும் கேள்விக்கு விடையாக இவ்வரலாற்றை வைத்திருப்பது இராமலக்குமணர்களுக்கு மட்டுமல்ல நமக்கும் சரியான விளக்கமாகும்.

# மதுரகவியாழ்வார்

பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

சிறு வயதிலேயே தெய்வீக ஞானம்பெற்று இனிமை நிறைந்த கவிகளை இயற்றும் ஆற்றல் பெற்றிருந்ததால் 'மதுரகவியாழ்வார்' என்று போற்றப்பட்ட இவர் பாண்டிய நாட்டில் திருக்கோளூர் என்ற தலத்தில் சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் கணாதியர் மற்றும் கருடனின் அம்சமாகத் தோன்றினார்.

விஷ்ணுபக்தி மேலிட்டு யோகநிஷ்டையிலும் திறம் பெற்றுத் திகழ்ந்தார் மதுரகவியாழ்வார். தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டுச் சென்று வடநாட்டுத் திருத்தலங்களைத் தரிசித்துக் கொண்டிருந்தார். அயோத்தி மாநகரில் அர்ச்சாரூபமாக எழுந்தருளிய ஸ்ரீ இராமனை சீதாபிராட்டியுடன் தரிசித்து வணங்கி அங்கேயே சிலகாலம் தங்கியிருந்தார்.

அயோத்தியில் இருந்த பொழுது இவருக்குக் கோளூர் நினைவுக்கு வந்தது. அவ்வூர் பெருமாளை இருந்த இடத்திலிருந்தே திசை நோக்கித் தொழுதார். அப்போது தென்திசையில் வானளாவிய ஜோதி ஒன்று தோன்றியது. அவ்வதிசயச் ஜோதியை இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து கண்டார் மதுரகவியாழ்வார். அதன் உண்மை விபரம் அறியவிழைந்து அது தோன்றிய திசையில் பயணமானார்.

வடநாட்டுத் திருப்பதிகள், தென்னாட்டுக் கோயில்கள் பலவற்றையும் கடந்து வந்து ஆழ்வார் திருநகரியை அடைந்தார். அங்கிருந்த நம்மாழ்வார் தான் அவ்வதிசய ஜோதியாக விளங்கிய உண்மையை உணர்ந்து கொண்டார்.

மோனத்தில் இருந்த நம்மாழ்வாரை எழுப்பினார். வினாவும் எழுப்பினார். அவரிடம் விடை பெற்றபின் அவரது முதல் சீடராகி உபதேசமும் பெற்றார். அவ்வாழ்வார் வைபவத்தைப் போற்றிப் பரவும் ஆச்சார்ய கைங்கரியத்தையே தமது தொண்டாகக் கொண்டுவிட்டார்.

நம்மாழ்வார் திருநாடு எழுந்தருளிய பிறகு, திருநகரியில் அவர் தம் அர்ச்சாமூர்த்தம் ஒன்றை பிரதிஷ்டை செய்து அவருக்கே கோலாகலமான விழாக்களைக் கொண்டாடினார் மதுரகவியார்.

'வேதம் தமிழ் செய்த மாறன் வந்தார்! திருமாலுக்கு உரிய தெய்வப் புலவர் வந்தார்!' என்று தமது ஆசிரியரைப் புகழ்ந்து விருதுகள் ஓதி விழா வெடுத்தார். அதனைக் கேள்வியுற்ற மதுரைச் சங்கப் புலவர்கள் பொறாமை கொண்டனர். ''உமது ஆசிரியர் என்ன சங்கத்தில் இருந்தாரா! அவரது நூல்தான் சங்கப் பலகையில் அரங்கேறியதா?'' என்றெல்லாம் சங்கப் புலவர்கள் வினவினர்.

அவற்றைக் கேட்டு மனம் வருந்திய மதுரகவியாழ்வார் 'சங்கப் புலவர்களின் செருக்கை அடக்கத் தாங்களே வழிகாட்ட வேண்டுமென நம்மாழ்வாரின அர்ச்சா மூர்த்தத்தின் முன் பிரார்த்தனை செய்தார்.

நம்மாழ்வார் ஒரு கிழவேதியர் உருவில் தோன்றினார். திருவாய்மொழியிலுள்ள 'கண்ணன் கழலினை நண்ணும் மனமுடையீர்' என்ற பாசுரத்தின் முதலடியை ஓர் ஓலையில் எழுதிக் கொடுத்து அதனைச் சங்கப் பலகையில் வைத்திடும்படிக் கூறினார்.

ஆசிரியர் அந்தணர் உருவில் வந்து எழுதிக் கொடுத்த ஓலையுடன் மதுரகவிகள் மதுரை சென்றார். ஓலையைச் சங்கப்பலகையிலும் இட்டார். அது சங்கப்பலகையில் இடம் பெற்றுத் திகழ்ந்ததுடன் பலகையில் இருந்த சங்கப் புலவர்களைப் பொற்றாமரைக் குளத்தில் தள்ளி விட்டது.

குளத்தில் தள்ளப்பட்ட புலவர்கள் நீந்திக் கரையேறினர். 'வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன்' என்ற கருத்தை ஏற்றுப் போற்றினர். அத்துடன் அப்புலவர்கள் ஓலையெடுத்து நம்மாழ்வாரைப் போற்றி ஒவ்வொரு பாடல் இயற்றினர். தனித்தனியே இருந்து தனித்தனி ஓலைகளில் அவர்கள் எழுதிய எல்லா ஓலைகளிலும்

சேமங் குருகையே! செய்ய திருப்பாற்கடலோ!
நாமம் பராங்குசமோ! நாரணமோ -தாமம்
துளபமோ! வகுளமோ! தோளிரண்டோ!
முளவோ! பெருமானுனக்கு?'' [நான்கு

என்ற பாடலே இருக்கக் கண்டு வியந்தனர். அது முதல் அவர்கள் நம்மாழ்வாரிடமும் மதுரகவிகளிடமும் பக்தியும் மரியாதையும் காட்டத் தொடங்கினர்.

இராமபாதுகைகளை வழிபட்ட பரதனுக்கே பணிவிடை செய்து உய்ந்த சத்ருக்குனன்போல் மதுரகவியாழ்வார் நம்மாழ்வாருக்கு அவர்தம் வாழ்நாளில் பணிவிடைகள் பலவும் புரிந்தார்.

'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற திவ்யப் பிரபந்தத்தை அருளியவர் மதுரகவியாழ்வார்.

முன்குடுமிச் சோழிய அந்தணர் வகுப்பில் தோன்றிய மதுரகவிகள் வேளாண் மரபில் தோன்றிய மாறனைத் தமது குருநாதராகக் கொண்டு உயர்ந்தார்.

அவ்வாறே அஞ்சிப்போய் கலிமெலிய அழலோம்பிய அந்தணர் அப்பூதி அடிகளென்னும் சைவ நாயன்மார், வேளாண் மரபில் உதித்த அப்பர் பெருமானையே தெய்வமெனக் கொண்டு உய்ந்தார்.

திருப்பாணாழ்வாரது குலம் நோக்காது அவரை அழைத்து வரப் பணித்துத் தன்னுள் ஐக்கியமாக்கிக் கொண்டான் அரங்கநாதன்.

திருநாளைப்போவரை அவ்வாறே தன்னுள் கலக்கச் செய்தான் ஆடல்வல்லான்.

சைவ நாயன்மார்கள் மற்றும் வைணவ ஆழ்வார்கள் சாதிவேறுபாடு கருதாத, தீண்டாமைக்கு இடம் கொடாத சமயச் சான்றோர்கள் ஆவார்கள். அவர்கள் வரலாறுகளை விரிவாகக் கற்றல் மேற்படி வேறுபாடுகள் அற்ற சமுதாயம் உருவாக உதவிடும் என்பது உறுதி.

# “அப்பனும் ஆச்சாரியரும்”

அமரர் நா. வேணுகோபால் நாயகர்

'உடல் மிசை உயிர் கரந்து
எங்கும் பரந்துள்ளது ''
(கரந்து: கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து)

உடல் முழுவதும் உயிர் பரவி உள்ளது போல, உயர்வற உயர் நலம் உடையவனான எம்பெருமானும், பிரபஞ்சம் முழுவதும் பரவியுள்ள பஞ்சபூதங்களான ஆகாயம், தீ, காற்று நீர், நிலம் முதலியவற்றுள் ஊனக்கண்ணுக்குப் புலப்படாமல் பரவியுள்ளான. இதுவே இறைவனுடைய 'அந்தர்யாமித்வ' நிலை.

நம்மாழ்வார் இதைச் சுருக்கமாக அருளுகிறார்.

'திடவிசும்பு' எரி, வளி,
நீர், நிலம், இவை மிசை,
படர் பொருள் முழுவதுமாய்
அவை அவைதொறும்
உடல் மிசை உயிர் எனக்
கரந்து எங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவை உண்ட சுரனே''

அந்தர்யாமியாக உள்ள எம் பெருமான் நித்தியர்களும், முக்தர்களும் சேவிப்பதற்காகப் பரம பதத்தில் எழுந்தருளியுள்ளான். இதுவே இறைவனுடைய 'பரமபத' நிலையாகும்.

மூன்றாவதாக, முனிவர்களும், தேவர்களும் தொழுவதற்கும், வரம் வேண்டற்கும் பாற்கடலில் (திரு அனந்தாழ்வான் மீது) பள்ளி கொண்டுள்ளான். இது 'வியூக நிலை' எனப்படும்.

நான்காவதாக பூவுலக மக்களையும் ரட்சிப்பதற்காக அவ்வப்போது ராமர் கிருஷ்ணாதி அவதாரங்களை எடுக்கிறான். இது 'விபவம்' எனப்படும்.

கடைசியாக, ஐந்தாவதாக பூவுலகில் எல்லாக் காலத்திலும் பயன்படுவதற்காக ஆங்காங்கே திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ளான். இது 'அர்ச்சை' நிலை எனப்படும்.

ஒரு சமயத்தில் பெருக்கெடுத்து ஓடி அற்று விடும் ஆறுகள் போன்றவை அவதாரங்கள்.

எக்காலத்தும் உதவும் ஏரி குளம் முதலிய நீர்த்தேக்கங்கள் போன்றவை திருக்கோயில்கள் அதாவது அர்ச்சை நிலை.

இவ்விதமாக இறைவன் ஆங்காங்கே எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் அமைந்த பதிகள்-திவ்ய தேசங்கள்' என்று சிறப்பிக்கப் படுபவை 108 ஆகும்.

இதற்குக் காரணம் மயர்வற மதிநலம் அருளப்பட்ட நம் ஆழ்வார்கள் எம்பெருமான் எழுந்தருளியுள்ள 108 பதிகளை மங்களா சாசனம் செய்தருளியதுதான்.

இவ்விதமாகப் பாடல் பெற்ற 108 பதிகள் 'திவ்ய தேசங்கள்' என்றும், இப்பாடல்களை அருளிய ஆழ்வார்களை 'திவ்ய சூரிகள்' என்றும் அவர் தம் பாடல்களைத்'திவ்யப் பிரபந்தம்' என்றும் போற்றுகின்றோம்.

திவ்ய சூரிகளான ஆழ்வார்கள் தம் திவ்ய பிரபந்தங்களான பாடல்களால் 108பதிகளைப் பாடியதால் அவைகள் திவ்ய தேசங்கள் எனறு கொண்டாடப்பட்டாலும் இவைகளிலும் தனிச் சிறப்பு அடைந்துள்ளவை நான்கே.

இவைகளைக்: 'கோயில்' 'திருமலை' 'பெருமாள் கோயில்' 'ஸ்ரீ திருநாராயணபுரம்' எனப் போற்றுகிறோம்.

கோயில் என்பது திருவரங்கம்;
திருமலை என்பது வடவேங்கடம்;
பெருமாள் கோயில் என்பது காஞ்சி
அத்திகிரி;
திருநாராயணபுரம் என்பது மேலக்கோட்டை.

திவ்ய தேசங்கள் 108 என்றுவிரவியிருப்பினும், இவைகளுள், கோயில் திருமலை, பெருமாள் கோயில் திருநாராயணபுரம், 'ஸ்ரீரங்க மங்கள நிதிம், கருணா நிவாசம் ஸ்ரீவேங்கடாத்திரி சிகராலய காளமேகம்! ஸ்ரீ ஹத்தி சைல சிகரோஜ்வல பாரிஜாதம்! ஸ்ரீசம்நமாமி சிரசா யது சைல தீபம்' என்ற நான்கே தனிச் சிறப்புடன் திகழ்வதற்குக் காரணம் இந்த நான்கு திவ்ய தேசங்களில் தான் ஆழ்வார்களுக்கு அடுத்தபடியாக அவதரித்தருளிய ஆசாரியர்

களும் பெரிதும் ஈடுபட்டுச் சேவை புரிந்து வாழ்ந்தனர்.

ஸ்ரீ வைணவ உலகின் தலைநகரமாக விளங்குவது திருவரங்கம்.

நாதமுனிகள் தொடக்கமாக மணவாள மாமுனிகள் தேசிகன் வரை எழுந்தருளியிருந்த ஸ்ரீ வைணவ ஆசாரியர்கள் அனைவரும் திரு வரங்கத்தில் எழுந்தருளியிருந்தனர்.

திருவரங்கத்தில் மடங்களை ஏற்படுத்தி ஸ்ரீ வைணவ மதத்தின் தலைவர்களாகத் திகழ்ந்தனர்.

திசை விளக்காய் நிற்கின்ற திருவரங்கமே எனப் புகழ் பெற்றது திருவரங்கம்.

திருமலை எனப்படுவது வட திருவேங் கடம். பிறகு இதை விரிவாகக் கவனிக்கலாம்.

பெருமாள் கோயில் எனப்படுவது பெருந் தேவித் தாயார் சமேத பேரருளாளர் எழுந் தருளியுள்ள அத்திகிரியான காஞ்சீபுரமாகும்.

பேரருளாளர் திருஅடிவாரத்தில் திருக் கச்சி நம்பிகள், உடையவர், கூரத்தாழ்வான், பெரிய நம்பி, மணவாள மாமுனிகள், தேசிகன் முதலான நம் ஆசார்யர்கள் சேவை புரிந்து சிறந்தனர்.

திரு நார்ராயணபுரம் எனப்படும் மேலக் கோட்டையில் அனந்தாழ்வான், உடையவர், திரு நார்ராயணபுரம் ஆய் முதலான ஆச்சர்ய புருஷர்கள் எழுந்தருளியிருந்தனர்.

ஆச்சார்ய புருஷர்களால் சிறப்பிக்கப் பெற்ற கோயில், திருமலை, பெருமாள்கோயில் திருநார்ராயணபுரம் என்னும் நான்கு திவ்ய தேசங்களிலும், திருமலையான திருவேங்கடத் திற்கே மிக உயர்ந்த சிறப்பு உள்ளது.

'எப்பாவம் பலவும் இவையே செய்து இளைத்
தொழிந்தேன்
துப்பா நின் அடியே தொடர்ந்தேத்தவும்
கற்கின்றிலேன்
செப்பார் திண்வரைசூழ் திருவேங்கட மாமலை
என்
அப்பா வந்தடைந்தேன் அடியேனை ஆட்
கொண்டருளே'

'அப்பனுக்குச் சங்காழி அளித்த பெருமாள்' இதைத் தெளிவாக விண்ணப்பிக்கின்றேன்.

ஆழ்வார்களால் உயர்வு பெற்ற திவ்ய தேசங்கள் இப்போது விஷயமல்ல.

ஆசாரியர்களால் சிறப்புற்ற நான்கு திவ்ய தேசங்களிலும் திருமலையே-சென்னி ஓங்குதல் திருவேங்கடமே சிறந்ததாகும்.

எனவேதான் இம்மகுடம்: 'அப்பனும் ஆசாரியரும்'' உலகுக்கு எது திலதமாக இருக்கும்?

'திலதம் உலகுக்காய் நிற்பவன் திருவேங் கடத் தெம் பெருமானே' இது நம்மாழ்வார் திருவாக்கு.

கோயில், பெருமாள் கோயில், திருநாரா யணபுரம் சென்று சேவித்தால் ஆசாரியர் களுடைய நினைவு பளிச்சென்று வருவது கடினம்.

ஒரு ஸ்ரீ வைணவ பக்தன் திருமலைக்குப் போய் சேவித்தால் ஆசாரியர்களை நினைந்து நினைந்து உருகாமல் சேவிக்க இயலாது இன் றைக்கும்.

திருமலையில் திருவேங்கடமுடையான் திருவீதி எழுந்தருளுகிறார்; தென்னண்டை மாடவீதியில் குறித்த இடத்திற்கு எழுந்தருளிய தும் நின்று விடுகிறார். ஏன்?

அங்கிருந்துதான் ஆழ்வார்களின் பாடல் களான திவ்யப் பிரபந்த சேவை தொடக்க மாகிறது.

ஏன் அங்கிருந்து தொடங்க வேண்டும்?

அந்தத் திருவீதியில், அதே இடத்தில் தான் பெரிய திருமலை நம்பிகளுடைய திரு மாளிகை அமைந்துள்ளது. இன்றைக்கும் சேவிக்கலாம்.

பெரிய திருமலை நம்பிகளுடைய திருப் பெயர்தான் திருமலையோடு முதன் முதலாகப் பேசப்படுவது. பெரிய திருமலை நம்பிகள்தான் திருவேங்கடமுடையான் திருவீதி உலா எழுந் தருளுகையில் ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்த (அத்யாபக)சேவையை ஆரம்பித்து வைத்தார்; நடத்தி வைத்தார் என்றும் கொள்ளலாம்.

பெரிய திருமலை நம்பிகள் ஸ்ரீ ராமாநுச ரின் தாய் மாமன்.

ஸ்ரீபெரும்புதூரில் தமது தங்கைக்கு ஆண் மகவு பிறந்த சேதியைக் கேட்டருளிய பெரிய திருமலை நம்பிகள், ஸ்ரீ பெரும்பூதூருக்கு எழுந்தருளி ஆதிசேடனின் அவதாரமாகப் பிறந்துள்ள குழந்தையைக் குளிரக் கடாட்சித்து அக்குழந்தைக்கு 'இளையாழ்வார்', ஸ்ரீராமாநு ஜர்' என்னும் திருப்பெயர் சூட்டி மகிழ்ந்தார் திருவேங்கடவர் தூதராக.

ஆதிசேடன், ராமனுக்கு அடுத்த இளைய பெருமாளான இலட்சுமணனாக அவதரித்த பிறகு, இராமாநுசராக அவதரித்தார் என் பதை சூசகமாக வெளிப்படுத்தவே இந்தத் திருப்பெயர் சூட்டப்பட்டது.

பரம பதத்தில் இருக்கையாகப் பணிப் புரிந்த ஆதிசேஷன், வியூகமான பாற்கடலில் படுக்கையாகப் பணிபுரிந்து, விபவத்தில் லட் மணனாகப் பணிபுரிந்து அர்ச்சையில் பணி புரிய இராமாநுசராக அவதரித்துள்ளதை அறிந்தார்.

(இயற்பா-முதல் திருவாய்மொழி)

'சென்றால் குடையாம். இருந்தால்
சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம். நீள்கடலுள்-என்றும்
புணையாம், மணிவிளக்காம், பூம்பட்டாம்,
புல்கும்
அணையாம், திருமாற்கு அரவு!''

ஆசாரியர்களுக்குள் சூரியச் சுடராக விளங்குபவர் நமது 'இராமாநுஜர். திருமலையைச் சேவித்தால் ராமாநுஜரது புகழ் நம்மைப் பிரவாகமாகச் சூழ்ந்து கொள்ளும்.

இராமாநுஜருடைய ஐந்து ஆசாரியர்களுள் ஒருவர் பெரிய திருமலை நம்பி.

ஒவ்வொரு ஆசாரியரிடத்தும் தனியாக ஒவ்வொரு அரிய விஷயத்தைக் காலட்சேபமாகச் சேவித்தவர் நம் இராமாநுஜர்.

திருமலையின் அடிவாரத்தில் ஒரு சமயத்தில் திருமலைநம்பிகள் எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீராமானுஜர் அதுசமயம் பெரியதிருமலை நம்பிகள் திருவடிகளில் ஓராண்டுக் காலம் வால்மீகிமுனிவர்அருளிய ஸ்ரீஇராமாயணத்தின் உயரிய கருத்துகளைக் காலட்சேபமாகச் சேவித்தார்.

இப்படி ஸ்ரீ ராமாயணக் காலட்சேபத்தை ஸ்ரீ ராமாநுஜர் பெரிய திருமலை நம்பிகளிடம் சேவித்துக் கொண்டிருக்கையில், தெற்கிலிருந்து பெரிய பெருமாளான இராமன், இளைய பெருமாளான இலக்குமணன், பிராட்டியான சீதையின் மூர்த்தங்கள் எழுந்தருளியதாகவும், அம்மூன்று மூர்த்திகளையும் திருவேங்கடவர் கர்ப்பக்கிருகத்தில் இடது பக்கம் எழுந்தருளிவித்ததாகவும் கர்ண பரம்பரை கூறுகிறது.


இம்மூன்று மூர்த்தங்களையும், இன்றும் ஸ்ரீனிவாசன் கருவறையில் சேவித்து மகிழலாம்.

இந்த இராமனுக்கே **'வேங்கடராமன்'** எனத் திருப்பெயர் ஏற்பட்டு, உலகம் எங்கும் பரவியுள்ளது.

திருவேங்கடவரே 'வேங்கட கிருஷ்ணன்' 'செடியாய வல் வினைகள் தீர்க்கும் திருமாலே, நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல் அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும் படியாய்க் கிடந்து உன் பவள வாய்க்காண்பேனே' எனத் திருவேங்கடவர் சந்நிதியில் ஸ்ரீ குலசேகர ஆழ்வார் வேண்டியதால் கருவறையின் பெருமாளுக்கு முன்பு உள்ள படிக்குக் 'குலசேகரன்படி' என்று பெயர்,

இந்தக் குலசேகரன் படியின் முன்பிருந்து கொண்டு ஸ்ரீனிவாசனைச் சேவிக்க வேணும்.

எம்பெருமான், 'வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக்கை வேங்கடவனாகவும்; கூன்



ஏறு சங்கம் இடத்தானாகவும்' சேவை சாதிக்கிறான்.

மற்ற சந்நிதிகளில், இதில் விசேடமொன்றுமில்லை. இவ்விதமாகத் திருவேங்கடவர், திருவாழி, திருச்சங்கத்துடன் சேவை சாதிக்கும் காரணம் மிக்க சுவையானது.


முதலாழ்வார்களில் தலைவரான பேயாழ்வார், திருமலையில் திருவேங்கடமுடையானைச் சேவித்தபோது அவர் கண்ட திருமேனி அழகைப் பாடுகிறார்.

'தாழ் சடையும் நீண்முடியும் ஒண்மழுவும்
சக்கரமும்
சூழ்அரவும் பொன்னாணும் தோன்றுமால்-
சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து''

திருக்கைகளிலே பேயாழ்வார் திருவாழியான சக்கரத்தைச் சேவித்திருக்கிறார். ஆனால் சங்கத்தைச் சேவிக்கவில்லை.

சிவபெருமானுடைய மழுவை ஏந்திக் கொண்டிருக்கிறார். அது மட்டுமா; சிவச் சின்னங்களான தாழ்சடை, சூழ் அரவு முதலியவைகளும் திகழ்கின்றன. பேயாழ்வாருடைய திருக்கண்களுக்குத் திருவேங்கடவர் திருமேனியில் இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து காணப்பட்டன.

அதாவது சிவனுடைய திருமேனிச் சின்னங்கள் திருவேங்கடமுடையானுடைய திருமேனியில் ஒன்றி அமைந்து காணப்பட்டன.



ஆனால் சாதாரண மக்களின் கண்களுக்குத் திருமலையில் சேவை சாதிப்பவர் திருவேங்கடமுடையானா? சிவன் தானா? என்னும் ஐயம் ஏற்பட்டுவிட்டது.

இராமானுஜர் காலத்தில் இது உச்சநிலைக்கு வந்துவிட்டது. திருமலை சிவத்தலம்தான் என்ற வாதம் மேலோங்கி பக்தி விளைவிக்க வேண்டிய தலம்சச்சரவைவிளைவித்துவிட்டது.

இந்தச் சந்நிதி ஸ்ரீ வைஷ்ணவ சந்நிதி தான் என்பதை நிலை நாட்ட வேண்டிய பொறுப்பு ராமாநுசருடையதாகிவிட்டது.

தமக்கு ஏற்பட்ட பொறுப்பை ஸ்ரீராமாநுஜர் திருவேங்கடவருக்கே சமர்ப்பித்து விட்டார்.

எல்லோருடைய சம்மதத்துடனும் ஒரு நாள் இரவு சிவச் சின்னங்களான திரிசூலம், உடுக்கை மழு முதலியவைகளையும்திருமாலின் சின்னங்களாக திருவாழி, திருச்சங்கு முதலியவைகளையும் வைத்துச் சந்நிதியைத் திருக்காப்பிடுவது; காலை, திருக்காப்பை நீக்கிச் சேவிக்கையில் எந்தச் சின்னங்களோடு மூர்த்தி விளங்குகிறார் எனப் பார்த்து அந்தத் தீர்ப்பின் படி நிரந்தரமாக நடந்து கொள்வது என சமரசம் ஏற்பாடு செய்தார்.

அவ்விதமே இரண்டு சின்னங்களையும் வைத்து இரவு திருக்காப்பிட்டுக் காலையில் திருக்காப்பை நீக்கவும், எம்பெருமான் திருவாழி, திருச்சங்கை தரித்துக் கொண்டு ஸ்ரீனிவாசனாகச் சேவை சாதித்தார். இராமானுஜர் எம்பெருமானின் இடமார்பிலும் இலக்குமியை எழுந்தருள்வித்தார்.

ராமாநுஜருடைய இந்த மகத்தான சேவையை மதிப்பிட முடியாது.

இச்சேவையால்தான் திருமலை இன்றும் ஸ்ரீ வைணவப்பொலிவுடன் விளங்குகிறது.

திருவேங்கடமுடையானுக்கு 'அப்பன்' என்றும் திருநாமம். ராமாநுஜர் திருவேங்கடமுடையானாகிற அப்பனுக்குச் சங்கும் சக்கரமும் அணிவித்ததால் 'அப்பனுக்குச் சங்காழி அளித்தருளும் பெருமாள்' என்ற புகழும் இராமாநுஜருக்கு ஏற்பட்டது.

ஒரு ஸ்ரீ வைணவனுக்கு சங்கு சக்ர முத்திரைகளைத் தரிப்பிக்கின்றவர் ஆசாரியன்; திருவேங்கடமுடையானுக்கு சங்கு சக்ர முத்திரைகளை ராமாநுஜர் தரிப்பித்ததால் அவர், திருவேங்கடமுடையானுக்கும்ஆசாரியராவார்.

திருமலையை ஸ்ரீ வைணவத் தலமாகவும் திருவேங்கடமுடையானைத் திருமாலாகவும், திகழ வைத்த அசாதாரண சேவையால் ஸ்ரீராமாநுஜருக்குத் திருமலையில் திருவேங்கடமுடையான் சந்நிதிக்கு அருகில் முதல் பிராகாரத்தின் வடக்கு பாகத்தில் தனி சந்நிதி ஏற்பட்டுள்ளது.

ராமாநுஜருக்குத் தவிர திருமலையில், ஆழ்வார்களுக்காவது மற்ற ஆசாரியர்களுக்காவது சந்நிதிகள் கிடையாது.

இத் தனிப் பெருமை ஸ்ரீராமாநுஜருக்கே உரியது.

மற்ற தலங்களில் கைளைக் கூப்பிய வண்ணம் சேவை சாதிப்பார் ஸ்ரீராமாநுஜர். திருமலையில் ஸ்ரீராமாநுஜர் ஆச்சார்ய புருஷனாக உபதேச முத்திரையுடன் சேவை தருகிறார்.

காரணம் : திருவேங்கடமுடையானுக்குத் திருவாழி அணிவித்து ஸ்ரீ வைணவப் பொலிவை ஏற்படுத்திய மகா சாதனைக்கும், சேவைக்கும் ஆகும்.

இன்னொரு விசேடம்: திருவேங்கடவர் (உற்சவமூர்த்தி) புறப்பாடு கண்டருளினால் முதலில் தம் ஆசாரியரான ராமாநுஜருக்குச் சேவை சாதித்த பிறகுதான் படி தாண்டி வெளியே சேவை சாதிப்பார்; ஆசாரிய நியமனம் பெற்றுதான் படி தாண்டுவார்.

திரு நாராயணபுரத்தை ஞான மண்டபம் என்றும், திருவரங்கத்தைப் போக மண்டபம் என்றும், பெருமாள்கோயிலான காஞ்சிபுரத்தை யாக மண்டபம் என்றும், திருமலையான திருவேங்கடத்தைப் புஷ்ப மண்டபம் என்றும் பெரியார்கள் சிறப்பிக்கின்றனர்.

அதாவது திருமலையில் புஷ்பக் கைங்கரியம் மிகவும் சிறந்தது. வியாழன் இரவு புஷ்ப அங்கி சேவை இங்கு விசேஷம்.

திருவரங்கத்தில் ஸ்ரீராமாநுஜர் திருவாய்மொழிக் காலட்சேபம் சாதித்தருளுகிறார்.

'ஒழிவு கல் காலம் எல்லாம்' பதிகத்தில் 'வானவர் கோனொடும் சிந்துபூ மகிழும் திருவேங்கடம்' என்ற இரண்டாவது பாசுரம் வந்தது. அதாவது திருவேங்கடவருக்குப் புஷ்பக் கைங்கரியம் மிகச் சிறந்ததாகையாலே, தேவர்களும், தேவேந்திரனுடன் ஆகாய மார்க்கமாக வந்து புஷ்பங்களைத் திருவேங்கட முடையான் மீது சிந்தி மகிழ்கின்றார்களாம்.

இந்த இடத்தில் ஒரு கருத்து தோன்றுகிறது ஸ்ரீராமாநுஜருக்கு. 'திருவேங்கட முடையானுக்குப் புஷ்ப கைங்கரியம் சிறந்ததாயிற்றே; இந்தக் காலட்சேப கோஷ்டியில் உள்ளவர்களில் யாரேனும் திருவேங்கடம் சென்று ஒரு நந்தவனம் வளர்த்து இப்புஷ்பக் கைங்கரியத்தை ஏற்றுக் கொள்ளுவீர்களா!' எனக் கேட்டார்.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். திருமலையில் அக்காலத்தில் குளிர் ஜுரம், விஷ ஜுரம், வன விலங்கு முதலிய ஆபத்துக்கள் நிறைந்திருந்தன.

பரவியிருந்த மௌனத்தைக் கலைத்து அனந்தாழ்வான் என்பவர் எழுந்து நின்று தனக்கு அப்பணியை நியமிக்க வேண்டினார். இவருடைய தைரியத்தை மெச்சி இராமாநுஜர் இந்த கோஷ்டியில் 'நீரே ஆண்பிள்ளை' என்றார். இதனால் அனந்தாழ்வானுக்கு 'அனந்தாண்பிள்ளை' என்ற சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று.

அனந்தாழ்வார் திருமலைக்கு எழுந்தருளி நந்தவனம் அமைத்து அதற்கு 'ராமாநுஜன்' எனத் திருப்பெயர் சூட்டினார்.



திருவேங்கட முடையானுக்குப் புஷ்பக் கைங்கரியம் புரிந்து வந்தார்.

நந்தவனத்திற்கு நீர் வசதியைப் பெருக்குவதற்கு, அருகில் இருந்த ஏரியை ஆழப்படுத்த முயன்றார்.

ஏரியில் இருந்த மண்ணை வெட்டி, பூரண கர்ப்பிணியான தன் மனைவியின் தலையில் கூடை மூலம் வெளியே அனுப்பிக்கொண்டிருந்தார்.

கொஞ்ச நேரத்தில், மனைவியார் பாதி அளவு நேரத்தில் மண்ணைக் கரையில் கொட்டிவிட்டு வர ஆரம்பித்தார்.

அனந்தாழ்வான் சந்தேகப்பட்டு இப்படிச் சுருக்கமாக வருவதன் காரணத்தைக்கேட்டார்.

இடைவழியில் ஒரு சிறுவன் மண் கூடையை வாங்கிக் கொண்டு, வேறு வெற்றுக் கூடையைத் தருவதாகவும் இப்படியே அவன் பாதியும், தான் பாதியுமாக தூரத்தைக் கடப்பதால் சீக்கிரத்தில் வருவதாக மனைவியார் கூறினார்.

அனந்தாழ்வானுக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. தமக்கு உடையவர் ஸ்ரீராமாநுஜர் நியமித்த கைங்கரியத்தைக் களவு செய்யும் அச்சிறுவனை நோக்கி ஓடினார். அச்சிறுவன் முகவாய் கட்டையில் மண்வெட்டியால் ஓங்கி அடித்து விட்டார். இரத்தம் பெருக அச்சிறுவன் ஓடி மறைந்தான்.

அன்றைய மலர்களைத் திருத்திக்கொண்டு அனந்தாழ்வான் திருவேங்கடவர் சந்நிதிக்குச் சென்றார்.

என்ன வியப்பு! என்ன வியப்பு! திருவேங்கடவரின் முகவாய்க் கட்டையில் ரத்தம் பெருகிக்கொண்டிருந்தது.

**(அடுத்த இதழில் நிறைவு பெறும்)**

# ஆண் பெற்ற பிள்ளை

**முருகதாஸ் தீர்த்தபதி**
சிங்கம்பட்டி

ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் மத்திய அரசை சார்ந்த மாநில சரித்திர ஆவண ஆய்வுக் குழுவில் நான் அங்கம் வகித்தபோது அகில இந்திய கருத்தரங்கு ஒன்று சென்னையில் நடைபெற்றதற்குச் சகல மாநிலங்களிலிருந்தும் அதில் கலந்து கொள்வதற்கெனப் பெருவாரியானபேராயர்கள் வந்திருந்தார்கள். என்னுடன் அங்கம் வகித்து மற்றும் என்னுடன் நட்புறவு பூண்ட திரு.ஏ.பி. ஷெட்டி அவர்கள் ''Inteinational and constitional Law'' வில் டாக்டர் பட்டம்பெற்று சென்னை சர்வகலா சாலையில் பேராசிரியராகப் பணியாற்றி எம்.எல்., வகுப்பு நடத்தி வந்தார்கள். அந்நேரம் ஆஜானுபாகுவான நபர் ஒருவர் அவரை அணுகி கிசுகிசுவெனப் பேசினார். 'இது ‘போன்ற கெள்விகளுக்கு நான் பதில் சொல்வதற்கில்லை'. எதிர் வரிசையில் அமர்ந்திருந்த என்னை சுட்டிக் காட்டி 'அவரிடம் கேளுங்கள்' என்றார். அதற்கு அப்பெரியவர் சற்றே எனது காதில் விழும் அளவிற்கு இலேசாக Helooks boyish என்று குறிப்பிட்டார். . 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெரும் தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து' என்ற வள்ளுவர் வாக்கியத்திற்கு இணங்க 'Appeaiances aie at time very deceptive ' என்று கூறி திரு ஷெட்டி அவரை ஊக்குவித்தார். என்னை சற்று தயக்கத்துடன் அணுகிய அவர் மத்திய அரசின் ஆவணக் காப்பகத்தில் உயர்மட்ட அதிகாரிஎன எனக்கு தெரியாததால் நான் எழுந்திருக்கவில்லை. அம்மேல்மட்ட அதிகாரி கனிவுடன் என்னை அணுகித்தான் தமிழ்நாட்டைச் சார்ந்தரானாலும் நாலு தலைமுறையாய் டெல்லி மாநகரில் இருந்து விட்டபடியால் தமிழ் பேசத் தெரியுமே அன்றி எழுத படிக்கத் தெரியாது என்றும் ஒரு வினாவிற்கு விளக்கம் தெரியாமல் 10 ஆண்டுகளுக்கு மேலாக தேடி வருவதாகவும் சொன்னார். அப்போது எனக்குத் தெரிந்தால் சொல்கிறேன் என்று சொன்னேன். அதாவது நடைமுறைக்கு ஏற்றவாறு நாம் ஒரு மனைவியோடுதானே வாழ வேண்டும். அப்படியிருக்க திருமுருகனுக்கு எப்படி இரு மனைவியராகலாம் என்று கேட்டார். அப்போது அவரிடம் முருகவேளுக்கு எப்படி இரு மனைவியர்கள் என்று கூறுகிறீர்கள் என்று கேட்டேன். ஏன் சார் நீங்கள் முருகன் கோவிலுக்குப் போனது இல்லையாவென்று கேட்டார். நான் முருகன் கோவில் ஒன்றுக்கு பரம்பரை அறங்காவலர் என்று சொன்னேன். பின்பு அவர் ஏன் அப்படி கேட்டீர்கள் என்று என்னை நோக்கி கேட்டார். நான் முருகனுக்கு மூன்று மனைவிகளன்றோவென்றேன். அவருடைய ஆதங்கத்தில் விளைந்த எரிச்சலில் ஓங்கி பளார் என்று அவர் தலையில் அறைந்து கொண்டார். பின் என்ன சார், இரு மனைவிகளே தவறு என்று நான் சொல்லும்போது மூன்று மனைவிகள் என்கிறீர்களேவென்று கேட்டார். அப்போது ஆங்கிலத்தில் அவருக்கு விளக்கும் வகையில் 'The mistake lies in you. you are attempting to see the spi.itual world with your physical eye' என்றேன். அதாவது தங்களது ஊனக் கண்ணை வைத்து சூச்சும உலகத்தைக் காண எத்தனிக்கிறீர்களே என்றேன். என்னிடம் அப்பதிலை மூன்று தடவைக்கு மேல் திரும்பச் சொல்லச் சொல்லிக் கேட்டார். அதன் பின் விளக்கம் கேட்டார். ஆங்கில மொழியிலே கப்பலோ அல்லது ரயிலோ சரியான நேரத்தில் வருகிறதாவென்று இங்கிலாந்தில் கேட்டால் ' She will arrive an hour late ' என்று கூறுவார்கள். அதாவது சக்தியைப் பெண்ணாகப் பாவிக்கிறார்கள். ஆகவே முருகனும் நாம் இல்லற தர்மத்தை ஓம்புவதுபோல் அவர் ஏற்று மணம் புரிந்து வாழ்ந்தாரில்லை. வள்ளியும், தெய்வானையும் இச்சா சக்தியும், கிரியா சக்தியும் மற்றும் அவர் கையில் தாங்கிய வேல் ஞான சக்தி என்றும் விளக்கம் கூறினேன். 10 ஆண்டுகளுக்கு மேலாக விளக்கம் கிடைக்காத புதிருக்கு விளக்கம் கிடைத்த மகிழ்ச்சியில் என்னைக் கட்டித் தழுவி ஆலிங்கணம் செய்து கொண்டார்.

காசிப முனிவருக்கும், மாயைக்கும் சூரபத்மன், சிங்க முகன் மற்றும் தாருகாசூரன் என்று மகன்கள் பிறந்தார்கள். காசிப முனிவர் மறுத்தும் மாயையின் வலுக்கட்டாயத்தின் பேரில் ராகு காலம் மற்றும் கொடூரமான அசுப வேளையில் கூடியதால் அசுரத் தன்மையுடன் குழந்தைகள் பிறந்தார்கள். பருவம் வந்ததும் தம்பிகள் இருவரையும் இருமருங்கில்அமர்த்திக் கொண்டு சிவபெருமானை நோக்கி கடும் தவம் புரிந்தான்சூரபதுமன். மந்திர விதிகளுக்கு ஏற்ப உச்சாடனங்க்ள் செய்தும் சிவபெருமான் தோன்றவில்லை. உடனே சூரபத்மன் தன் தலைலை.ய வெட்டி ஆகுதியில் பிடித்துவிட்டான். சிவபெருமான் தோன்றினார். அப்போது சிங்கமுகனும் தாருகாசூரனும் இப்போது வந்து என்ன பயன்! அவன் இறந்து விட்டானே என்றனர். அப்படியில்லை. இறந்தவன் சாதாரண சூரன், புத்துணர்வு பெற்று என்னால் எழுப்பப்படும் சூரன், நிகரில்லா ஆற்றல் படைத்தவனாக இருப்பான், என்னைப் புறக்கணித்து தக்கன் யாகத்திற்கு சென்ற தேவர்களைத் தக்கபடி தண்டிக்க வேண்டாமா என்று சொல்லி சகல வல்லமை ப்டைத்த சூரனை எழுப்பினார். வேண்டும் வரங்களை கேள் என்றார். அவன் ஆயிரத்து எட்டு அண்டங்களை நூற்று எட்டு சதுர்யுகம் ஆள வேண்டும் என்று கேட்டான். பல சிறந்த வரங்களை பெற்றதுடன் அல்லாமல் யட்சர், கிம்புருடர்,

ராட்சதர், அசுரர், தேவர், கந்தர்வர், வசுக்கள் பைசாசகணங்கள் மற்றும் விலங்கு, ஊர்வன, நீர் வாழ்வன முதலான எவையாலும் தனக்கு மரணம் வரக்கூடாது வென்று கேட்டான். இத்துடன் நில்லாமல், சிவனாலும், சக்தியாலும் எனக்கு மரணம் சம்பவிக்கக்கூடாது என்று கேட்டான். அதற்கு சிவபெருமான் தந்தேன், தந்தேன் என்று எல்லாவற்றையும் கொடுத்தவர் கடைசியில் நம் சக்தி இன்றி வேறு ஒன்றும் உன்னை அழிக்காது என்று ஒரு கூறி மறைந்து விட்டார்.

ஆயிரத்தெட்டு அண்டங்களையும், நூற்றி எட்டு சதுர்யுகம் சூரபத்மன் ஆண்டு முடிவு பெறும் நிலை வந்தது. தேவர்கள் அல்லல் உற்று அவர்களது இன்னல்களைக் களையும் நேரமும் வந்தது. குமார சம்பவம் நிகழ தேவர்கள் செய்த சூழ்ச்சியில் காமவேள் மறைந்து முருகவேள் உதித்தார். காமவேளே முருகவேள் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்று ஈஸ்வரனுக்கு ஐந்து முகங்கள், ஐந்து முகங்களுடன் அம்பாளுடைய கீழ் நோக்கிய முகமான அதோ முகத்துடன் ஷண்முகர் (ஆறுமுகர்) தோன்றினார்.

'ஐந்து முகத்தோடு அதோமுகமும்-தந்து
திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறி ஆறு உய்ப்ப-
விரிபுவனம்
எங்கும் பரக்க இமையோர் கண்டு அஞ்சுதலும்'

என்று குமர குருபர சுவாமிகளின் கலிவெண்பா கூறுகிறது.

ஒரு மனிதனுடைய ஒரு நாள் மூச்சு 21600 எனவும், மனிதனுடைய உடல் கூறில் 72000 நரம்பும் உள்ளது என நமது முன்னோர்களான ஆன்றோர்களும், சான்றோர்களும் கணக்கிட்டிருக்கிறார்கள். ஒரு மனிதனுடைய வாழ்நாளில் அவனுக்கு இத்தனை நாள் வாழ் நாள் என்று கணக்கிடாமல் இத்தனை மூச்சு என்றுதான் கணக்கிடப்பட்டுள்ளது. அதனாலேயே. **Breathlessness is Deathlessness** என்று யோகிகள் கூறுகிறார்கள்.

இவைகளை மேவியே சிதம்பரத்தில் நடராஜ பெருமானுக்கு வேய்ந்துள்ள தங்க ஓட்டின் எண்ணிக்கை 21600 மற்றும் அதனை 72,000 தங்க ஆணிகள் கொண்டு அறைந்தும் வைத்திருப்பதாகக் கூறுவார்கள். ஒரு சில நிமிடங்கள் சிற்றின்ப வேட்கையில் ஒரே ஒரு நரம்பின் வழி நம் திரேஜஸ் கீழ்நோக்கி இறங்கும்போது புளகாங்கிதம் அடைகிறோம். கண்டவர் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை என்று பேரின்பத்தைக் குறித்துச் சொன்னாலும் சாஸ்திர நுட்பங்களிலிருந்து மகரிஷிகளுக்கும், பரமஞானிகளுக்கும் அவர்களது உடற்கூறில் உள்ள 72,000 நரம்புகளிலும் எப்போதும் அதுமேல் நோக்கிக் கொண்டேயிருப்பது எனக் கொள்ள வேண்டியிருக்கிறது. சிவபெருமான் யோகியர்க்கு எல்லாம் யோகியும், யோகிகளின் தலைவருமாவார். அவர்தம் மேல் நோக்கிய திரேஜஸை ஊர்த்தரேஜஸ் எனக் கூறுவார்கள். ஆகவே அவரது நெற்றிக் கண் வழியாக ஆறு தீப்பிழம்பாக திருமுருகன் அவதரித்தார். அவர் ஆண் பெற்ற பிள்ளை, ஆகவேதான் அவர் மட்டும் உண்மையான ஆண் பிள்ளை, நம்மையெல்லாம் பெண் பெற்று எடுத்ததால் பெண் பிள்ளை. ஆன்மாக்கள் எல்லாம் பெண் தன்மையுள்ளனவே. ஆண்டவனைத்தரிசித்தால்தான் ஆண் தன்மை வரும். மகாவிஷ்ணு ஒருவரே சிவபெருமானை தரிசித்ததால் அவரை நாம் புருஷ உத்தமர், புருஷோத்தமர் என்று அழைக்கிறோம். நம்மை பெண்கள் பெற்றெடுத்ததாலும், ஆன்மாக்கள் பெண் தன்மை உடையன என்பதாலும் பிறந்த சில நிமிடங்களில் ஆண் பிள்ளை மார்பிலிருந்து பிதுக்கி **Witches milk** என்று எடுக்கிறார்கள். ஆகவே நான் சிறு வயதில் முகவை அரண்மனையில் வளர்ந்தபோது கை தேர்ந்த ஸ்தபதிகளும், சிற்ப சாஸ்திர நிபுணர்களும்முருகனுக்குச் சிலைவடிக்கும்போது முலை காம்பு வைக்கக்கூடாது என்று, சொல்லக்கேட்டிருக்கிறேன். நம் வள்ளியம்மை தினைபுனம் காவல் செய்தார் எனவும், அவளை மணம் புரிந்து கொள்ள்திருமுருகன் பல தந்திரங்களை செய்ய வேண்டியிருந்தது எனவும் அக்கால நாடகங்களிலும் கதைகளிலும் சித்தரித்துக் காட்டியிருப்பதில் அரும்பெரும் உண்மை அடங்கியுள்ளது என்பதை நாம் குருவாயிலாகப் பெற வேண்டிய காரியமாக இருக்கிறது. மேதகு சங்கரதாஸ் ஸ்வாமிகள் போன்றவர்களே அக்காலத்தில் நாடகத்தையே வகை செய்து சிறப்பித்தார்கள் என்றால் திரை உலகு தொடக்கத்திற்கு முன்பு கிராமப்புற பாமர மக்களுக்கு கோடை காலங்களில் நாடகமே பொழுது போக்காக அமைந்தது. கோடை விழா என்ற சொல் காலப் போக்கில் மருவி கொடைவிழா வாயிற்று (முக்கியமாக தமிழக தென் மாவட்டங்களில்) இதுபோலவே வழங்கப்படுகிறது. நம் ஆன்றோர்களான சான்றோர்களை எந்த வார்த்தை சொல்லிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. எந்த சிறு விஷயமானாலும் அவர்கள் தெய்வச் சிந்தனையுடன் இணைந்தே வாழ்ந்தார்கள் என்பதில் ஐயம் இல்லை. நான் அறிந்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பேதம் இன்றி ஆணும் பெண்ணும் (பருவமடைந்த பெண்களும்) நிலா வெளிச்சத்தில் இரவு நேரங்களில் கிளித்தட்டு என்ற விளையாட்டை தொட்டுபிடித்து விளையாடியதைப் பார்த்து இருக்கிறேன். அதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் தாம்பத்திய உறவே தெரியாமல் வாழ்ந்த காலமாகயிருந்திருக்கிறது. ஆகவே தான் முற்காலத்தில் தெய்வச் சிந்தனைமாறாத அளவில் அவைகளை கோபுரங்களிலும் மற்றும் தேர்களிலும் வடித்து வைத்தார்கள். முருகவேள் வேறு ஒருவருமில்லை, சிவபெருமானே, ஏனென்றால் சிவபெருமானைத் தவிர பிரபஞ்சத்தையே அழிக்க வல்லமை பெற்ற பாசுபதாஅஸ்தரம் சூரபத்மன் விட்டதும்

முருகப் பெருமானை மூன்று தடவை வலம் வந்து அவர் கையில் அமர்ந்து கொண்டது அப்படிப்பட்ட தெய்வாம்சம் பெற்ற மூர்த்தம் பெண் பின்னால் பரவசப்பட்டு அலைந்தது என்பது வெறும் கதையே தவிர வேறில்லை. முருகன் கடவுள், வள்ளியம்மை உயிர். பாசத்தால் கட்டுண்டு தன்னை வந்து அடைய வேண்டியதை உணராத உயிரைத் தானே கீழ் இறங்கி வந்து தன் நிலையை உணர்த்தி சேர்த்துக் கொள்கிறார். தோழிக் கும் சகல சிறப்பு உண்டு. அவள்தான் ஆண்ட வனைக் காட்டும் குரு, மாதா பிதா குரு தெய் வம் என்ற வரிசையை உன்னிப்பாகப் பார்த் தால் புலப்படும். சூலுற்றுப் பெண்கள் பத்து மாதத்தில் தாய்மை அடைவதற்கு காரணம், ஜீவ அணு தந்தை வயிற்றில் இரண்டு மாதம் இருந்து வலுப்பெறுகிறது. தந்தை நாற்றங் கால், தாய் விளைநிலம், ஆனால் தாய் சொல் லியே நாம் நம் தந்தையை அறிந்து கொள்ள வேண்டியதிருக்கிறது. ஆகவே அவருக்கு தந்தையைக் காட்டிலும் முதலிடம், அதுபோல தான் ஆண்டவனை நமக்குக்குருகாட்டவேண்டி யிருக்கிறது. ஆகவேதான் ஆண்டவனைக் காட்டிலும் குரு முதலிடம் பெறுகிறார்.

இதைப்போன்றுதான் கிருஷ்ண லீலையும் ''யான எனது என்னும் செறுக்கறுப்பான் வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகும்' என் கிறார் திருவள்ளுவர், உயிரினங்களுக்குக் கட்டுக்கடங்காதது ஒன்று உண்டு என்றால் அதுதான் ஆணவம்.

''There is perhaps no one of our natural passions so hard to subdue as pride. Beat it down, stifle it, mortify it as much as one pleases it is still alive. Even if I could conceiva that I had completely over come it, I should probally be proud of my humulity''.

—Benjamin Franklin

ஆகவே கண்ணன் வெண்ணெயை, தயிரை களவு செய்யவில்லை. உயிர்களிலுள்ள ஆண வம் களவ செய்கின்ற பாவனையில் எடுத்து விடுகிறார். அதைப்போலவே குளங்களில்நீரா டிய கோபிகாஸ்திரிகளின் சேலைகளை கள வாடி மரத்தில் ஏறிக் கொண்டு பார்க்கவில்லை பெண் தன்மையுடைய உயிரான கோபியர் ஸ்திரிகளுக்கு மும்மலங்கள் நீக்கி நிர்வாண நிலை அடைந்த உயிர்களுக்கே ஆண்டவன் புலப்படுவார் என்று விளக்குகிறார்.

## நித்தமும் காப்பான் வேலன்

ஆறு சுடர்முகங் கண்டு விழிக்கின்பம்
ஆகுதே—கையில்
அஞ்சலெனுங்குறிகண்டு மகிழ்ச்சியுண்
டாகுதே
நீறு படக்கோடும் பாவம் பிணிபசி
யாவையும்—இங்கு
நீக்கி யடியரை நித்தமுங் காத்திடும்
வேலவா!

—மகாகவி பாரதியார்



# நாயன்மார்கள் அடிச்சுவட்டில்

## தவத்திரு குன்றக்குடி அடிகளார்

அறுபான்மும்மை நாயன்மார் திருநாட்களில் அவர்கள் செய்த தொண்டு நெறியை நடைமுறைப்படுத்தும் செயல் திட்டம்.

அதிபத்த நாயனார்—ஆவணி-ஆயிலியம் :

(1) திருக்குளங்களில் மீன் வளர்த்து, அந்த வருவாயைத் திருக்கோயில்களுக்குப் பயன்படுத்தும் திட்டம்.

(2) திருக்கோயில் அமைந்துள்ள வட்டத்தில் வாழும் மீனவர்கள் நலன் நாடுதல்

அப்பூதி அடிகள்—தை-சதயம் :

(1) தண்ணீர்ப் பந்தல் வைத்தல்

(2) குடிதண்ணீர் வசதி செய்தல். திருத்தலத் திருவருட்பயணம் செய்பவர்களுக்கும், திருக்கோயில் நின்று விளங்கும் ஊருக்கும், திருக்கோயில் நிலங்கள் இருக்கும் ஊருக்கும்.

(3) குடிதண்ணீர் ஊருணிகள் தூய்மை செய்தல்;

(4) நடைமுறையில் இருக்கும் குடி தண்ணீர் வழங்கும் நிர்வாகம் பற்றி ஆய்வு செய்தல்—சீரமைத்தல்.

அமர்நீதி நாயனார்—ஆனி-பூரம்,

(1) திருக்கோயில்—திருமடங்களில்தொண்டு செய்யும் அடியார்களுக்கு உடை வழங்குதல்.

அரிவாட்டாய நாயனார்—தை-திருவாதிரை :

(1) திருமடைப்பள்ளி தூய்மை செய்தல், பழுது பார்த்தல்:

(2) திருமடைப்பள்ளிப் பாண்டங்கள் (பாத்திரங்கள்):

(அ) சரிபார்த்தல்,

(ஆ) பழுது பார்த்தல்

(இ) தேவைக்கு வாங்குதல்

(2) திருவமுதுத் திட்டம் சரிபார்த்தல்—சீர் செய்தல்.

(4) திருமடைப்பள்ளியில் பணிசெய்பவர்களுடன் கலந்துரையாடுதல், விருந்தளித்தல், பாராட்டுதல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

(5) இறைவனுக்குச் சிறப்புத் திருவமுது செய்வித்து வழிபாடு செய்தல்-(மாவடு சேர்த்தல்).

ஆனாய நாயனார்—கார்த்திகை-அத்தம்.

(1) இசைக் கருவிகள் (மேளம், சங்கு, மணி, நகரா புல்லாங்குழல் முதலியன பற்றி) ஆய்தல்—சீரமைத்தல்.

(2) தேவைக்குப் புதியன வாங்குதல்.

(3) திருக்கோயில்—திருமடத்தில் இசைத் துறையில் பணி செய்பவர்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டுதல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்:

(4) இசைப் பள்ளிகளின் நடைமுறை பற்றி ஆராய்தல்.

இசை ஞானியார்—சித்திரை-சித்திரை

(1) சமயச்சார்புடைய மகளிர் மன்றம் அமைத்தல், சங்க வளர்ச்சிக்குரியன எண்ணிச் செயல்;

(2) மகளிர் நலம் பேணுவதற்குரியன எண்ணிச் செய்தல்:

(3) கருவுற்ற பெண்களுக்குச் சத்துணவு, நற்செய்திகள் கிடைக்கச் செய்தல் :

(4) மகப்பேறு மருத்துவ மனைகளுக்குச் சென்று திருநீறு முதலியன வழங்குதல்.

இடங்கழி நாயனார்—ஐப்பசி-கார்த்திகை:

(1) திருக்கோயில் திருமடத்தில் தொண்டு செய்யும் அடியார்களுக்கு அமுதளித்தல்

(2) அடியார்களுக்கு வழங்கப்பெறும் படித்தரங்கள் பற்றி ஆய்வுசெய்தல்:

(3) அடியார்களின் நலம்நாடுதல்;

(4) அடியார்களுடன் கலந்துரையாடுதல், விருந்தளித்தல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்:

இயற்பகை நாயனார்—மார்கழி-உத்திரம் :

(1) திருக்கோயில்களில், திருமடங்களில் பணிசெய்பவர்களில் யாராயினும் ஒருவருக்கு அல்லது பலருக்குத் திருமணம் செய்வித்தல்;

(2) திருக்கோயில்களில் பள்ளியறை, பல்லக்கு முதலியன தூய்மை செய்தல்

இளையான்குடிமாறனார் —ஆவணி-மகம்

(1) சிவபூசகர்களுக்கு-அடியார்களுக்குத் திருவமுது செய்வித்தல்.

(2) நாற்றங்கால்கள் அமைத்தல்-சீரமைத்தல்—செழிப்புண்டாக்குதல்.

உருத்திர பசுபதி நாயனார்-புரட்டாசி-அசுபதி

(1) திருக்கோயில் திருமடத்தில் வடமொழி மறை ஓதவும் திருநாமத்தைத் தொடராக எண்ணுதல் முதலியன முறையாக நிகழவும் ஏற்பாடுகள் செய்தல்;

(2) உருத்திர செபத்திற்கு ஏற்பாடு செய்தல்

(3) வடமொழி மறை ஓதும் அந்தணர்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டுதல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

எறிபத்த நாயனார்—மாசி அத்தம் :

(1) நந்தனவனப் பாதுகாப்பு;

(2) பூக்குடலைகள் சீர் செய்தல்;

(3) திருமாலை கட்டும் இடம் மேடைகள் சீர்செய்தல்:

ஏயர்கோன் கலிக்காம நாயனார்—ஆனி-ரேவதி

(1) சிவனடியாராக இருப்பவர்களுடன் எவரோடாயினும் தனிப்பட்ட முறையிலோ-ஆட்சி முறையிலோ வருத்தம் ஏற்பட்டு இருக்குமானால் அந்த வருத்தத்தை மாற்றி உடன்பாடும், உறவும் காணுதல்.

ஏனாதி நாயனார்—புரட்டாசி-உத்திராடம்:

(1) தூய வெண்மையான திருநீறு தயாரிப்புக்குத் திட்டமிடல். உற்பத்தி செய்தல்

(2) திருநீறு தூய்மை செய்தல். வேண்டுவோர்க்கு வழங்குதல்.

(3) திருநீற்றுக்கலன்கள்—குங்குமக்கலன்கள் செய்ய ஏற்பாடு செய்தலும், தேவைப்படும் இடங்களில் அமைத்தலும்.

(4) திருநீற்றுத் தேவைக்குத் திட்டமிடுதல்:

(5) அன்பர்களுக்கு வழங்கத் திருநீற்றுப் பைகள் தைக்க ஏற்பாடு செய்தல்.

ஐயடிகள் காடவர் கோன்.—ஐப்பசி மூலம்:

(1) அன்பர்களுடன் திருத்தலப் பயணம் செய்தல்.

கணநாதர்—பங்குனி-திருவாதிரை.

(அ)1. சமயப் பாட வகுப்பு, திருமுறைப் பள்ளி நடைமுறைகளை ஆராய்தலும், சிறப்புற நடத்தத் திட்டமிடுதலும்.

(2) சமயப்பள்ளி வகுப்புகளுக்கும், திருமுறைப்பள்ளி வகுப்புகளுக்கும் ஆண்டு விழா நடத்துதல்.

3. திருமுறை பயிலும் மாணவ-மாணவியர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கற்கும் ஆர்வத்தைத் தூண்டுதல்.

4. புதிய வகுப்புகள் திட்டமிட்டுத் தொடங்குதல்.

5. திருமுறைச் சமயப்பாடம் நடத்தும் ஆசிரியர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடல்,விருந்தளித்தல், ஆசிரியர்களுக்குப் பரிசில்கள் வழங்குதல்.

(ஆ)1. திருக்கோயில், திருமடத்தில் 'சரியைத்' தொண்டில் (திருவலகு திருமெழுக்குப் பணிப்பெண்) ஈடுபட்டிருப்பவர்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், அவர்களுடைய நலனுக்குரியன நாடுதல்.

2. 'சரியை' தொண்டுக்கு உரிய கருவிகள் வாங்குதலும், சீரமைத்தலும் (திருவலகு, ஒட்டடைக் கம்பு, ஏணி, குப்பை தொட்டிகள், குடம், வாளி சவுட்டுப்பு..........).

கணம்புல்ல நாயனார் —கார்த்திகை— கார்த்திகை :

(1) திருக்கோயில்—திருமடம் திருவிளக்கு எண்ணெய்த் தேவைக்குத்திட்டமிடுதல்.

(2) தேவைக்குரிய எண்ணெயைப்பெற இலுப்பைத் தோப்புகள் வளர்க்கத் திட்டமிடுதல்.

(3) இலுப்பைத்தோப்புகளை வளர்த்தல்-பராமரித்தல்.

(4) இலுப்பை வளர்ப்புப் பணியாளர்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

கண்ணப்ப நாயனார்—தை-மிருகசீரிடம்

(1) திருக்கோயில் திருமடத்தில் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கண் ஆய்வு செய்தல்.

(2) தேவையானால் கண் மருத்துவம் செய்தல்—தேவைக்குக் கண்ணாடிகள் வாங்கித்தருதல்.

(3) பக்தி இயக்கத்தைப் பற்றி ஆய்வு செய்து நடவடிக்கை எடுத்தல்.

(4) வஷலயன் சமூக (கண்ணப்பர்குல) மக்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டுதல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

கலிக்கம்ப நாயனார்—தை-இரேவதி :

(1) திருக்கோயில்—திருமடத்தில் வேலை செய்யும் கடைநிலை ஊழியர்களின் மதிப்புயரக் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

(2) அவர்களுடைய சமய உணர்வு வளர்ச்சிக்கு வழி வகுத்தல்.

கலிய நாயனார் —ஆடி-கேட்டை:

(1) திருவிளக்குக்குரிய எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்குத் திட்டமிடுதலும், திட்டத்தின் இலக்கை அடைதற்குரிய பணிகளை மேற்கொள்ளுதலும்.

(2) இலுப்பைத் தோப்புகள் வளர்த்தல்.

(3) ஆண்டுத் தேவைக்குரிய எண்ணெய் வித்துக்களைச் சேர்த்தல்.

கழறிற்றறிவார்—ஆடி-சுவாதி :

(1) திருக்கோயில்—திருமடத்தில் கால் நடைகள் வளர்க்கத் திட்டமிடுதல் :

(2) கால்நடைகள் பாதுகாப்பு

(3) மயில், சேவல், கிளி ஆகியன வளர்த்தல், (திருத்தலங்களின் இயல்புக் கேற்ற வகையில்).

(4) அவற்றின் வளர்ப்புத் தொடர்பான பணிகளில் ஈடுபட்டிருப்போர் நலம் பேணுதல், கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டுதல்.

## அடிகளாருக்கு அஞ்சலி

**அண்மையில் தமிழின் வடிவாக வாழ்ந்த குன்றக்குடி அடிகளார் அமரர் ஆனார்கள். கோயிலைத் தழுவிய குடிகள், குடிகளைத் தழுவிய கோயில் என்பது அடிகளார் வற்புறுத்தி வந்த சமய நெறியாகும். அவர் தம் நினைவைப் போற்றும் வகையில் இக்கட்டுரை நன்றியுடன் வெளியிடப்படுகிறது.**

(5) திருக்கோயிற் பூசைகள் குறித்தகாலத்தில் நடைபெறும் வகைபற்றிஆராய்தல் நடைமுறைப்படுத்துதல்.

(6) நந்தவனப் பாதுகாப்பும்—பராமரிப்பும்.

(7) நண்பருக்கு உதவி செய்தல்.

கழற்சிங்க நாயனார் —வைகாசிபரணி:

(1) சிவ பூசைக்குப் பயன்படும் மலர்களை உற்பத்தி செய்யும் நந்தனவனங்களில் பிறபயிர் செய்யாதிருத்தல்.

(2) நந்தனவனத்தைச் செழுமைபடுத்துதல்.

(3) இறைவனுக்கு நறுமண மலர்களால்மலர் முழுக்குச் செய்தல்.

காரி நாயனார்—மாசி-பூராடம் :

(1) திருக்கோயில் திருத்தல வரலாறுகள் அச்சிடுதல்.

(2) வரலாறு எழுதுவித்தல்.

(3) வழிபாட்டுப் பாடல்கள் பாடுவித்து அச்சிடுதல்.


(4) வழிபாட்டு நூல்கள், தல வரலாற்று நூல்கள் ஆகியவைகளின் விற்பனை வரவு செலவு பற்றி ஆராய்தல்.

காரைக்காலம்மையார்—பங்குனி-சுவாதி :

(1) திருக்கோயில்—திருமடத்தில் மாந்தோப்பு வளர்க்கத் திட்டமிடல்.

(2) மாந்தோப்பு வளர்த்தலும், கண்காணித்தலும்.

(3) மாந்தோப்பு வளர்ப்பும், பாதுகாப்பும் பணியாளர்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டல், அவர்கள் நலம் பேணுதல்.



(4) இறைவனுக்கு மாம்பழம் படைத்தல்.

குங்குலியக்கலயர்—ஆவணி-மூலம் :

(1) திருக்கோயில் திருமடங்களில் தூபமிடும் கலசங்கள் சீரமைத்தலும், தேவைக்கு வாங்குதலும்.

(2) தூபமிடப் பயன்படு பொருள்களின் தரம் பற்றி ஆய்வு செய்தல்.

(3) தூபமிடும் பணியாளர்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டுதல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

குலச்சிறை நாயனார்—ஆவணி-அனுடம்.

(1) தக்க அன்பர்களுடன் சமய வளர்ச்சிக் கருத்துக்கள் பற்றி ஆராய்ந்து திட்டமிடல்.

(2) தக்க சமயத் தொண்டர்களுடன் நட்புக் கொள்ளுதல்.

(3) சமயத் தொண்டர்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டல், அவர்கள் நலனுக்குரிய நாடுதல்

(4) சமயப் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்தல்.

(5) நமது மக்கள் மதமாற்றங்களுக்குள்ளாகாமல் பாதுகாத்தல்.

(6) பிற மதத்துக்குப் போனவர்களை நமது மதத்திற்குத் திரும்ப அழைத்தல்

(7) அருள்நெறித் திருக்கூட்டஅமைப்பை வலிமைப்படுத்துதல்.

கூற்றுவ நாயனார்—ஆடி-திருவாதிரை.

(1) அம்பலக்கூத்தன் சந்நிதிகள் தூய்மை செய்தல்.

(2) அம்பலத்தன் திருமேனிக்குப் பழக் காப்பிடுதல்.

(3) திருவமுதுக்கென்று நிலங்களைஒதுக்குதல்.

கோச்செங்கட் சோழர்—மாசி-சதயம் :

(1) திருக்கோயில்கள் பழுதுறாமல் பாதுகாக்கும் திட்டம் தீட்டுதல்-பாதுகாத்தல்.

(2) திருப்பணிகள் தொடங்குதல், திருக்கோயிலைப் பேணும் பணியாட்கள் (கொத்தனார், உழவாரம்) நலம் பேணுதல், கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டுதல்.

(3) திருக்கோயில் காவல், திருமேனி காவல், மெய்காவல் முறை—வகைப் பற்றி ஆராய்தல்.

(4) காவல் செய்யும் ஊழியர்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டுதல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

கோட்புலி நாயனார்—ஆடி-கேட்டை

(1) திருக்கோயில் திருமடத்தின் தேவைக்கு நெல் சேர்த்தல்.

(2) களஞ்சியங்கள் பழுது பார்த்தல், தூய்மை செய்தல்.

(3) திருவமுதுக்கென்று நிலங்களை ஒதுக்குதல்.

சடைய நாயனார்—மார்கழி-திருவாதிரை

(1) திருக்கோயில் சிவாசாரியர்களுக்குத் திருமணத்திற்கு உதவி செய்தல்—திருமணம் செய்வித்தல்.

சண்டேசுவர நாயனார்—தை-உத்திரம்

(1) இறைவனுக்குப் பால் முழுக்குத் திட்டம் பற்றி ஆராய்தல்.

(2) பசுமடம் நடைமுறை பற்றி ஆராய்தல்.

(3) பசுமடம் அமைத்தல்—பசு மாடுகள் வாங்குதல்.

(4) பசுமடத்துப் பணியாட்களுடன் கலந்துரையாடல்—விருந்தளித்தல், பாராட்டுதல் அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

(5) இறைவனுக்குச் சிறப்பான முறையில் பால் முழுக்காட்டுதல்.

(6) சண்டேசுவர நாயனார் சந்நிதி தூய்மை செய்தல், சண்டேசுவர நாயனாருக்குச் சிறப்பு வழிபாடு செய்தல்.

சத்தி நாயனார் —ஐப்பசி-பூசம் :

(1) பெரியபுராண வகுப்பு நடத்துதல்.

(2) பெரியபுராண விழா நடத்துதல்.

(3) பெரியபுராணம் தொடர்பான புத்தகங்கள் வெளியீடுதல். .

(4) அறுபான்மும்மை நாயன்மார்களுக்கு எண்ணெய்க் காப்பும், திருமுழுக்கும் செய்வித்துச் சிறப்பு வழிபாடு செய்தல்

(5) பெரியபுராணத்தைப் பரப்பும் தொண்டர்க்ளைப் பாராட்டிச் சிறப்புச் செய்தல்.

(6) பெரியபுராண மறுப்புரைக்கு மறுப்புரை எழுதி வெளியிடுதல்.

(7) அறுபான்மும்மை நாயன்மார் தொண்டை நடைமுறைப்படுத்திய செயல்முறைபற்றி ஆய்வு செய்தல்.

சாக்கிய நாயனார்—மார்கழி—பூராடம் :

(1) திருக்கோயில் வழிபாட்டில் நம்பிக்கையில்லாதவர்களுக்கு நம்பிக்கை யூட்டும் வகையில் நேரடியாகத் தொடர்பு கொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளுதல்.

(2) அந்த வகையில் பேசுதல்-எழுதுதல்-அரங்குகள் நடத்துதல்.

(3) அந்தவகையான நூல்கள் அச்சிடுதல்.

சிறப்புலி நாயனார்—கார்த்திகை-பூராடம் :

(1) சிவபூசகர்களுக்கும், அடியார்களுக்கும் அமுதளித்தல்—பொருள் அளித்தல்.

சிறுத்தொண்ட நாயனார்—சித்திரை-பரணி

(1) திருமடங்களுக்குப் பிள்ளைகள் சேர்த்தல்.

(2) சமய இயக்கத்துக்குத் தொண்டர்களைச் சேர்த்தல்.

(3) திருக்கோயில்திருமடத்தின் வழிவழித் தொண்டு செய்யும் பிள்ளைகளுடன் (வயது 5 முதல் 10 வரை) கலந்து பேசுதல், நிறுவன உணர்வை வளர்த்தல், விருந்தளித்தல். அவர்களின் நலனுக்குரியன நாடுதல்.

(4) சிறுவர் பள்ளி நடைமுறை பற்றிஆய்வு செய்தல்.

சுந்தரமூர்த்தி நாயனார்—ஆடி-சுவாதி :

(1) சிவாசாரியர்களுடைய தகுதி—நிலை முதலியன பற்றி ஆராய்தல்.

(2) சிவாசாரியர்களுடன் கலந்து உரையாடல், விருந்தளித்தல், பாராட்டுதல் அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

(3) தமிழ் வழிபாட்டு இயக்கம் பற்றி ஆய்வு செய்து மேலும்வளர்க்கத் திட்டமிடுதல்.

(4) திருமுறை அருச்சனை, திருமுறைச் சாத்து முதலியவற்றை வளர்க்கப் பணி மேற்கொள்ளல்.

(5) நண்பர்களுடன் கலந்துரையாடுதல் நட்புறவை வளர்த்துக் கொண்டு செழுமைப்படுத்திக் கொள்ளுதல்.

செருத்துணை நாயனார்—ஆவணி—பூசம் :

(1) சிவபூசைக்குரிய மலர்கள் தொடுக்கும் இடத்தில் ஈ, எறும்பு, கொசு மொய்க்காமல் மலர்கள் பாதுகாப்புக்குரிய ஏற்பாடு செய்தல்.

சோமாசிமாற நாயனார் :—வைகாசி-ஆயிலியம்

(1) நாள்தோறும் வேத வேள்வி(நித்யாக் கினி), செய்யும் திருக்கோயில் வேத அந்தணர்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டுதல் அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

(2) அன்றையதினம் சிறந்த முறையில் வேத வேள்வி செய்யச் செய்தல்:
(3) திருக்கோயில்களில் உருத்திர வேள்வி, உருத்திர செபம்—சிறப்புத் திருமுழுக்கு ஏற்பாடு செய்தல்.

தண்டியடிகள்—பங்குனி-சதயம்:

(1) திருக்குளம் தூய்மை செய்தல்—திருக் கோயில் கிணறுகள் தூய்மை செய்தல்-திருக்குளம் பழுது பார்த்தல்—திருக் குளத்துக்குத் தண்ணீர் வரத்துக் கால் வெட்டுதல்.

திருக்குறிப்புத் தொண்டர்—சித்திரை-சுவாதி:

(1) (அ) பரிவட்டங்கள் இருப்பு எடுத்துச் சரிபார்த்தல்.

(ஆ) தூய்மை செய்தல்.

(இ) தூய்மை செய்யும் இடம், முறை முதலியன பற்றி ஆய்தல்.

(2) பரிவட்டம் தூய்மை செய்யும் தொண்டு செய்வோருடன் கலந்துரை யாடல்,விருந்தளித்தல், பாராட்டுதல், அவர்கள் நலனுக்குரியன செய்தல்.

திருஞானசம்பந்தர்—வைகாசி-மூலம் :

(1) ஆதின—தேவாலய மருத்துவமனை நடைமுறைபற்றி ஆய்வு செய்தல்.

(2) உடல் நலக் குறைவு காரணமாக இளைத்த பெண்களுக்கு—மாணவிகளுக்கு சத்துணவு கொடுக்க ஏற்பாடு செய்தல்.

(3) தமிழ் வளர்ச்சிக்குரிய பணிகளில் ஈடு படுதல்.

திருநாவுக்கரசு சுவாமிகள்—சித்திரை-சதயம் :

(1) (அ) அப்பர் சுவாமிகள் திருமேனிக்கு சிறப்பு வழிபாடு செய்தல்.

(ஆ) உழவாரத் தொண்டு செய்தல்.

(இ) உழவாரப் பணி செய்யும் பணி யாள்களுடன் கலந்துரையாடல், விருந் தளித்தல், பாராட்டுதல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

(2) (அ) திருமுறைக் கோயில்கள் அமைத் தல்.

(ஆ) திருமுறை ஆசிரியர்களுடன் கலந் துரையாடல்,விருந்தளித்தல், பாராட்டு தல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

(3) (அ) திருவலகு, திருமெழுக்கு இடும் முறை கவனித்தல்—சீரமைத்தல்.
(ஆ) இப்பணி செய்யும் பணியாட் களுடன் கலந்துரையாடல், விருந் தளித்தல், பாராட்டுதல் அவர்கள் நல னுக்குரியன நாடுதல்.

(4) (அ) அப்பர் வரலாறு—திருமுறை பற்றிய கருத்தரங்குகள் நிகழ்த்துதல்.

(ஆ) நமது சமயத்திலிருந்து மக்கள் மதமாற்றக் கொடுமைகளுக்கு ஆளாகா மல் பாதுகாக்கத் திட்டமிடுதல்—செய்தல்.

(5) சாதி வேற்றுமைகள் அகற்றும் பணி யில் ஈடுபடுதல்.

(6) நிறுவனத்தின் உடைமை பொது மக்களின் நலனுக்குப் பயன்படும் வகை யில் துப்புரவு வாழ்க்கைக்குத் திட்ட மிடுதல், மேற்கொள்ளுதல்.

திருநாளைப்போவார் நாயனார்—புரட்டாசி - உரோகிணி :

(1) தீண்டாமை விலக்கல் பணிகள் செய் தல்.

(2) ஆதீன—தேவாலய நிலங்களை உழ வடை செய்பவர்கள், ஊழியம் செய்ப வர்கள் ஆகிய தாழ்த்தப்பட்ட மக்களுடன் திருக்கோயில் சிறப்பு வழிபாடு செய்தல்.

(3) அவர்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டுதல்,அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

திருநீலகண்ட நாயனார்—தை-விசாகம் :

(1) திருக்கோயில்களுக்குத் திருவமுது படையலுக்கு எடுத்துச் செல்லும் கலன்கள் தூய்மை செய்தல்—தேவைக்கு வாங்குதல்.

(2) திருக்கோயில் திருமடங்களின் சார் பாளர்களின் மனை வாழ்க்கை மாறு பாடின்றி நிகழும் வகையை ஆராய்தல்.

(3) கருத்து மாறுபாடு இருப்பின் உடன் பாடு செய்வித்து இன்ப உறவினை வளர்த்தல்.

(4) குடும்பத்துடன் அழைத்து விருந்து வைத்தல்—மகிழ்வித்தல்.

(5) தனிப்பட்ட வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும், சீலம் நிறைந்த வாழ்க்கைக்கு முயலுதல்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர்—வைகாசி-மூலம்:

(1) திருமுறைப் பண்ணுக்குத் துணை இசைக் கருவிகள் இயக்குபவர்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டுதல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.
(2) இயலுமாயின் அந்நாளில் துணை இசைக் கருவிகளுடன் திருமுறைப் பண்ணிசையரங்கு அமைத்தல்.
(3) திருமுறைப் பண்ணிசை யரங்கிற்குச் சிறந்த முறையில் துணை இசைக்கருவி இயக்கும் ஒருவரைப் பாராட்டிப் பரிசு வழங்குதல்.

திருநீலநக்க நாயனார்—வைகாசி-மூலம் :

(1) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மதிப்புக் கிடைக்கும் வகையில் கலந்துரையாடல் விருந்தளித்தல், பாராட்டுதல், அவர்கள் நலனுக்குரியன நாடிச் செய்தல்.
(2) தாழ்த்தப்பட்டோரே இலை என ஆக்கல்.

திருமூல நாயனார் —ஐப்பசி-அசுபதி:

(1) கால்நடைகள் பாதுகாத்தல்.
(2) பாதுகாக்கும் திட்டமிடுதல்.
(3) திருமந்திரக் கருத்தரங்குகள் நடத்துதல்.

நமிநந்தியடிகள் —வைகாசி-பூசம் :

(1) திருவிளக்குகள் சீரமைப்பு—தூய்மை செய்தல், விரிவாக்கல்.
(2) திருவிளக்கு எண்ணெய்த் திட்டம் ஆராய்தல்.
(3) திருவிளக்கிடும் பணியாட்களுடன் கலந்து பேசுதல், விருந்தளித்தல், பாராட்டுதல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.
(4) திருவிளக்குக்குப்பயன்படும்இலுப்பை மரங்கள் வளர்த்தல்.
(5) திருக்கோயில்களில் நூறாயிரம் திருவிளக்குகள் (இலட்ச தீபம்) ஏற்றுவித்தல்.
(6) திருக்கோயில்களில் தீவட்டிகள் எடுக்கும் முறை—வகை பற்றி ஆராய்தல்.
(7) தீவட்டி எடுக்கும் ஊழியர்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டுதல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.
(8) திருக்கோயில்களில் கைவிளக்கு எடுக்கும் முறை—வகைப்பற்றி ஆராய்தல்.
(9) திருக்கோயில்களில் கைவிளக்கு எடுக்கும் ஊழியர்களுடன் கலந்துரையாடல் விருந்தளித்தல், பாராட்டுதல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

நரசிங்கமுனையரைய நாயனார்—புரட்டாசி-சதயம்.

(1) திருக்கோயில்களில் பூசை செய்யும் சிவாசாரியர்களின் குழந்தைகள் வளர்ப்பு, கல்வி, சிவாகமப் பயிற்சி திருமுறைக் கல்வி ஆகியன. குறித்து ஆராய்தல்.
(2) அந்தக் குழந்தைகளுடன் (5 வயது முதல் 15 வயதுவரை) கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டுதல்.

நின்றசீர் நெடுமாற நாயனார்—ஐப்பசி-பரணி

(1) கிறித்தவ, இசுலாமிய சமயங்களிலிருந்து நமது சமயத்திற்கு மாறியோர் நலன் பேணுதல்.
(2) விரும்புவோரை மதம் மாற்றுதல்.
(3) நம்முடைய சமயத்தைச் சேர்ந்தவர்கள் பிறமத மாற்றத்துக்கு ஆளாகாமல் தடுக்கும் நடவடிக்கை எடுத்தல்.

நேச நாயனார்—பங்குனி-உரோகிணி

(1) திருமடத்து அடியார்கள், திருக்கோயில்களில் பணி செய்யும் அடியார்கள் ஆகியோருக்கு உடை வழங்குதல்.
(2) கைத்தறியாளர்களுக்குரிய நலம் நாடுதல்.

புகழ்ச்சோழ நாயனார்—ஆடி-கார்த்திகை.

(1) திருக்கோயில் திருமடத்துச் சூழலில் இதர பொதுப்பணி மனைகளின் சூழலில் எல்லாரும் சிவ சின்னம் அணிதற்குரிய வாய்ப்புகளை உருவாக்குதல்

புகழ்த்துணை நாயனார்—ஆவணி ஆயிலியம்.-

(1) (அ) சிவாசாரியர்களையும், ஓதுவார்களையும், மற்ற பணியாளர்களையும் தீக்கை முதலியன செய்துகொள்ளத் தூண்டுதல்.
(ஆ) தீக்கை செய்வித்தல்.
(2) சிவாகமப் பயிற்சி செய்வித்தல், குறுகியகாலப் பயிற்சி வருப்புகள் நடத்துதல், சிறப்பாக சிவாசாரியர்களுக்குச் சமய விசேட, ஆசிரிய தீக்கைகள் செய்வித்தல்.

(3) திருக்கோயிலில் மூல மூர்த்தியின் சிவ பூசைக்குரிய திட்டங்கள் ஆய்வு செய்தல்-இயன்றால், சிவ பூசகர்களை அழைத்துச் சிவ பூசை செய்வித்தல்.

பூசலார் நாயனார்—ஐப்பசி-அனுடம் :

(1) திருக்கோயில் திருமடத்துச் சூழலில் தியானம் செய்வதற்குரிய இடங்கள் அமைத்தல், சூழல் உருவாக்கல்.

(2) அகப்பூசை, தியான முறைகளை விளக்குதல்—செய்யத் தூண்டுதல்.

பெருமிழலைக் குறும்ப நாயனார்—ஆடி-சித்திரை :

(1) யோகக்கலை வல்லாரைக் கொண்டு வல்லவர்களுக்கும். தக்கவர்களுக்கும் யோகக் கலை கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தல்.

(2) பிராணாயாமப் பயிற்சி செய்யக் கற்றுக் கொடுத்தல்.

(3) யோகாசனங்கள் கற்றுக் கொடுத்தல்.

மங்கையர்க்கரசியார் —சித்திரை-உரோகிணி

(1) திருக்கோயில் அமைந்திருக்கும் ஊர்களில் மங்கையர்க்கரசி மகளிர் மன்றங்கள் நிறுவி வழிபாட்டில் ஈடுபடுத்தி பணிகள் குறித்து ஆராய்தல்.

(2) நம்மோடு தொடர்புடைய மங்கையர்க்கரசி மகளிர் மன்றங்களின் பணிகளை ஆய்வுசெய்து ஊக்கம் தருதல்.

(3) அருள்நெறித் திருக்கூட்டம் மாதர் பகுதி இயக்கத்தைப் பற்றி ஆய்வு செய்து வலிமைப்படுத்துதல்.

(4) சிறந்த சமயப்பற்றும் கல்வித் திறனும் உள்ள மாணவிக்கு மேற்படிபபுக்கு ஊக்கமளித்தல்.

(5) நம் பள்ளிகளில் பயிலும் பெண் குழந்தைகள் நலன்-மகளிர் பள்ளிகள் வளர்ச்சி ஆகியன குறித்து ஆராய்தல்.

(6) சமயப்பணியில் ஈடுபட்டுள்ள மகளிருக்குப் பாராட்டுச் செய்தல்.

மானக்கஞ்சாற நாயனார்—மார்கழி-சுவாதி

(1) திருக்கோயில் முடியெடுக்கும்இடங்கள் சீர் செய்தல்,

(2) முடியெடுக்கும் பணியாள்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டல் அவர்கள் நலனுக்குரியன நாடுதல்,

முருக நாயனார் வைகாசி-மூலம்

(1) நந்தனவனம் அமைத்தல், வளர்த்தல் பேணுதல்.

முனையடுவார் நாயனார்—பங்குனி-பூசம் :

(1) திருக்கோயில் பாதுகாப்பிலும், அருள் நெறி இயக்கத்திலும் உறுதியாகப் பகை, துன்பம், இழப்புப் பாராமல் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

மூர்க்க நாயனார்—கார்த்திகை-மூலம்

(1) மூர்க்க நாயனார் பெயரால் பரிசுச் சீட்டு வாங்குதல், பரிசு விழுந்தால் அந்தப் பரிசுத் தொகையைத் திருக்கோயில் பேணலுக்குக் கொடுத்தல்

(2) வெளி நிழல் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, பந்தயங்கள் நடத்தி, வெற்றி பெற்ற கட்சியின் பந்தயத் தொகையைத் திருக்கோயில்களுக்குக்கொடுக்கச் செய்தல்.

(3) ''மூர்க்க நாயனார் விளையாட்டுப் போட்டி'' என்று விளையாட்டுப் போட்டிக்குப் பெயர் வைத்தல்.

மூர்த்தி நாயனார்—ஆடி-கார்த்திகை

(1) திருக்கோயில்களில் சந்தனத் திட்டம் சரிபார்த்தல்.

(2) சந்தனம் அறைவைக் கட்டை தரம் பார்த்தல்.

(3) மேடை—அறைவைக்கல் சீர் செய்தல்

(4) இயலுமானால் சந்தனமுழுக்கு—சந்தனக் காப்புச் செய்து சிறப்பு வழிபாடு செய்தல்.

5) சந்தன அறைப்புப் பணியாள்களுடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

மெய்ப்பொருள் நாயனார்—கார்த்திகை-உத்திரம் :

(1) நம்முடனும், நம்முடைய நிறுவனத் திட்டமும் கருத்து வேறுபாடு அல்லது மாறுபாடு கொண்டிருப்பவர்களுடன் உடன்பாடு கண்டு உறவு வளர்த்துக் கொள்ள முயற்சி செய்தல்.

(2) நம்முடைய திருக்கோயில்கள் மடங்களில் வழிவழி வழிபாடு செய்யும்—செய்து கொள்ளும் எந்த அன்பரோடாயினும் ஏற்பட்டுள்ள வழக்கில் விட்டுக் கொடுத்து உடன்பாடு காண முயற்சி செய்தல்.

வாயிலார் நாயனார்—மார்கழி-ரேவதி :

(1) சிவபூசை செய்வோர், திருக்கோயில் திருமடங்களைச் சார்ந்து பணிசெய்வோர் ஆகியோருடன் கலந்துரையாடல், விருந்தளித்தல், பாராட்டல், அவர்கள் நலனுக்குரியன நாடுதல்.

(2) எல்லோரையும் சிவபூசை செய்யத் தூண்டுதல்:

(3) சமய—விசேட தீக்கை செய்ய ஏற்பாடு செய்தலும், பலரைச் சிவபூசை செய்யத் தூண்டுதலும்.

(4) பலர்கூடிச் சிவபூசை செய்ய ஏற்பாடு செய்தல்:

(5) சிவபூசை செய்வோருக்குப் பூசைக்குரிய கலன்கள் வழங்குதல்.

விறண்மிண்ட நாயனார்-சித்திரை-திருவாதிரை

(1) தக்க சிவனடியார்களுக்குப் பாங்காக இருந்து பரிவு காட்டுதல்.

000



# ஸ்ரீ நாலாயிர திவ்யப்பிரபந்தம்

## நயவுரை

டாக்டர் ஜெகத்ரட்சகன்



(12)

### பெரியாழ்வார் திருமொழி

**காப்பிடல்**

இந்திரனோடு பிரமன்
ஈசன் இமையவர் எல்லாம்
மந்திர மா மலர் கொண்டு
மறைந்து உவராய் வந்து நின்றார்
சந்திரன் மாளிகை சேரும்
சதுரர்கள் வெள்ளறை நின்றாய்
அந்தியம் போது இது ஆகும்,
அழகனே! காப்பிட வாராய்.

இந்திரன், பிரமன், சிவன் முதலியோரும் அவர் சொற்படி நடக்கும் தேவர்களும், எல்லோரும் உலகினர் கண்ணுக்குத் தோன்றாமல் தூவும் மலருடன் மறைந்து இடையிலே நிற்கிறார்கள். வெண் மதியளவு ஓங்கிய மாட மாளிகைகள் நிறையப் பெற்று உன் அன்பிலும், தோழமையிலும் ஆராக் காதலராய் உள்ளவர்கள் நிறைந்த திருவெள்ளறையில் எழுந்தருளியவனே! பொன் மாலைப் பொழுது இதுவாகும். எழிலோவியனே! அழகனே! திருக்காப்பிட வேண்டும். வருக.

கன்றுகள் இல்லம் புகுந்து
கதறுகின்ற பசு எல்லாம்;
நின்றொழிந்தேன் உன்னைக் கூவி,
நேசமேல் ஒன்றும் இலாதாய்;
மன்றில் நில்லேல், அந்திப் போது;
மதிற் திருவெள்ளறை நின்றாய்;
நன்று கண்டாய் என்தன் சொல்லு;
நான் உன்னைக் காபபிட வாராய்.

கன்றுகள் வந்து பால் குடிக்க விடுதல், கறத்தல் செய்வார் இல்லாமல் பசுக்கள்முலைக் கடுப்பால் கதறுகின்றன; பால் கறக்கவேண்டிய நான் உன்னை அழைத்துவிட்டேன். அவை கன்றை நினைத்துக் கதறுவதைப் போலே நான் உன்னை நினைத்துக் கூவுகின்றேன். கதறும் பசுக்களிடம் அதன் கன்றுகள்கொண்ட அன்பளவாவது, நீ என்னிடம் காட்டவில்லையே. நீ மாலை வேளையில் நாற்சந்தியில் நில்லாதே. மதில் சூழ் திருவெள்ளறையில் நிற்பவ; என் சொல் உனக்கு நல்லதாகும். நான் உன்னைக் காப்பு இடவாராய்.

செப்பு ஓது மென்முலையார்கள்
சிறுசோறும் இல்லும் சிதைத்திட்டு
அப்போது நான் உரப்பப் போய்
அடிசிலும் உண்டிலை, ஆள்வாய்;
முப் போதும் வானவர் ஏத்தும்
முனிவர்கள் வெள்ளறை நின்றாய்!
இப்போது நான் ஒன்றும் செய்யேன்,
எம்பிரான், காப்பிட வாராய்.

எனை ஆளப் பிறந்தவனே! மூன்று காலங்களிலும் தேவர்களாலே போற்றி, உன் மங்களத்தையே எண்ணுகிற திருவெள்ளறையில் நிற்பவ: செப்பளவு மெல்லிய முலையார் விளையாட்டில் மணற்சோற்றையும் மணல் வீட்டையும் அழிக்க, அக்காலத்தில் நான் சினந்து சொல்ல, நான் பிடித்தடிப்பனோ என்றஞ்சி என் முன் நில்லாமல் அப்பாற் போய் சோற்றையும் உண்ணாமல் இருந்தாய். இப்பொழுது உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன். காப்பிட்டுக் கொள்ள வருக.

கண்ணில் மணல்கொடு தூவிக்
காலினால் பாய்ந்தனை என்று என்று
எண் அரும் பிள்ளைகள் வந்திட்டு
இவர் ஆர்!-முறைப்படுகின்றார்;
கண்ணனே! வெள்ளறை நின்றாய்
கண்டாரொடே தீமை செய்வாய்!
வண்ணமே வேலையது ஒப்பாய்!
வள்ளலே! காப்பிட வாராய்.

கண்ணனே! திருவெள்ளறையில் நின்றருளியவ: கண்டவரோடு தீம்பு செய்பவ! கருநீலக் கடல் நிறம் பெற்றவ: வாழ்வளிக்கும் வள்ளலே: அருமையான பிள்ளைகள் விளையாட வந்திருக்க, நீ மணலை அவர்கள் கண்ணில் தூவிவிட்டு, மேலும் காலினாலும் உதைத்தாய், தீராத விளையாட்டுகளைச் செய்கிறாய் என்று பலமுறை சொல்லி, நீ

செய்யும் தீம்பை முறையிட்டு நின்றார்கள். ஆதலால் அங்கே போவதை விட்டுக் காப்பு இட்டுக் கொள்ள வருக.

பல்லாயிரவர் இவ் ஊரில்
பிள்ளைகள் தீமைகள் செய்வார்,
எல்லாம் உன்மேல் அன்றிப் போகாது;
எம்பிரான; நீ இங்கே வாராய்;
நல்லார்கள் வெள்ளறை நின்றாய்:
ஞானச் சுடரே! உன்மேனி
சொல் ஆர வாழ்த்தி நின்று ஏத்திச்
சொப்படக் காப்பிட வாராய்.

இவ்வூரில் தீம்புகளைச் செய்யும் சிறுவர்கள் பல ஆயிரவராவார். அவர் செய்யும் தீம்புகள் உன்மேலல்லாமல் வேறொருவர் மேலும் ஏறாது. அங்கே போகாமல் என் தலைவனே, நீ இங்கே வாராய். நல்லவர் வாழ்கிற வெள்ளறையில் நின்ற அறிவொளிச் சுடரே; உன் திருமேனியைச் சொல் நிறைய நின்று, நன்றாகப் போற்றிப் புகழ்ந்து ஏத்தி இன்புற்று நிற்கிறேன். நீ காப்பு இட்டுக் கொள்ள வருக:

கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல்
கரு நிறச் செம் மயிர்ப் பேயை
வஞ்சிப்பதற்கு விடுத்தான்
என்பது ஓர் வார்த்தையும் உண்டு;
மஞ்சு தவழ் மணி மாட
மதிற் திருவெள்ளறை நின்றாய்,
அஞ்சுவன் நீ அங்கு நிற்க,
அழகனே! காப்பிட வாராய்.

கம்சன் உன்மேல் சினங்கொண்டு இருள் வடிவ கறுநிறப் பூதனையை, 'நேருக்கு நேர் சென்றால் கொல்ல முடியாது; அவனை வஞ்சனையால் கொன்றுவிடு' என்று உன்னைக் கொல்வதற்கு அனுப்பினான் என்ற ஒரு சொல்லும் கேட்டதுண்டு. ஆதலால் நீ அவ்விடத்திலே நிற்பதற்கு நான் அஞ்சுகிறேன். அதனால் முகில்கள் தவழும் உயரிய மாடங்களும் மதிலும் சூழ்ந்த திருவெள்ளறையில் உள்ளவனே! அழகனே! நீ அந்திக் காப்பிட்டுக் கொள்ள வருக!

கள்ளச் சகடும் மருதும்
கலக்கு அழிய உதைசெய்த
பிள்ளையரசே! நீ பேயைப்
பிடித்து முலை உண்ட பின்னை
உள்ளவாறு ஒன்றும் அறியேன்;
ஒளிவுடை வெள்ளறை நின்றாய்;
பள்ளிகொள் போது இது ஆகும்;
பரமனே; காப்பிட வாராய்.

வஞ்சனையுடன் வந்த சகடாசுரனையும் யமளார்சுனங்களையும் உன் தொடை, தோள்களால் தள்ளிச் சாய்த்த பிள்ளையே! நீ பேயைத் தாயாகப் பிடித்து முலையுண்டதை அறிகிறேனில்லை. மேலும் இப்படிச் செய்தால் என்றோ ஒரு நாள் தொல்லையும் விளையும் என்றஞ்சுகிறேன். அழகுடைய ஒளி நிரம்பிய திருவெள்ளறையிலே நின்றவனே! இப்போது பொன் மாலைப் பொழுது வந்துவிட்டது. உனக்கு ஒரு குறை வாராமல் நான் காப்பிட வருக.

இன்பம் அதனை உயர்த்தாய்!
இமையவர்க்கு என்றும் அரியாய்
கும்பக் களிறு அட்ட கோவே!
கொடுங் கஞ்சன் நெஞ்சினிற் கூற்றே
செம்பொன் மதில் வெள்ளறையாய்!
செல்வத்தினால் வளர் பிள்ளாய்!
கம்பக் கபாலி காண் அங்கு;
கடிது ஓடிக் காப்பிட வாராய்.

பேரின்பத்தை எனக்கு உண்டாக்கியவனே! தேவர்களுக்கு எந்நாளும் அரியவனே! குவலையா பீட யானையைக் குலைத்தவனே! கொடிய கம்சனின் நெஞ்சில் காலனாய் நின்றவனே! பொன் மதில் வெள்ளறையில் வீற்றிருப்பவனே! செல்வச் செருக்கோடு வளர்ந்தவனே! கண்டார் நடுங்கும் காபாலி வருகிறான், விரைந்து காப்பிட்டுக் கொள்ள வருக!

இருக்கொடு நீர் சங்கிற் கொண்டிட்டு
எழில் மறையோர் வந்து நின்றார்;
தருக்கேல், நம்பி; சந்தி நின்று
தாய் சொல்லுக் கொள்ளாய் சில நாள்;
திருக்காப்பு நான் உன்னைச் சாத்த
தேசு உடை வெள்ளறை நின்றாய்:
உருக்காட்டும் அந்தி விளக்கு இன்று
ஒளி கொள்ள ஏற்றுகேன் வாராய்.

'வேதப்புனித இருக்கை' சொல்லி தூய நீரைச் சங்கிலே கொண்டு உனக்கு வாழ்த்திட அந்தணர் வந்துள்ளனர். தீம்புடைய தேவதைகள் உள்ள நாற்சந்தியிலே நின்று செருக்கித் திரியாதே. சிலகாலம் தாய்ச் சொல்லைக் கேட்பாயாக. வனப்புடைய திருவெள்ளறையிலே நின்றவனே! இப்போது நான் அழகிய திருக்காப்பு இடுவதற்காக உன் திருமேனி வடிவத்தைக் காட்டும் அந்தி விளக்கை ஒளியுடையதாக ஏற்றுவேன். இதைக் காண வருக.

போது அமர் செல்வக்கொழுந்துபுணர்
திருவெள்ளறையானை
மாதர்க்கு உயர்ந்த அசோதை மகன்
தன்னைக் காப்பிட்ட மாற்றம்
வேதப் பயன் கொள்ள வல்ல விட்டுசித்தன்
சொன்ன மாலை
பாதப் பயன் கொள்ள வல்ல பத்தர்
உள்ளார் வினை போமே.

'தாமரைச் செல்வி' மணாளனாகத் திருவெள்ளறையில் நின்றவனைப் பெண்களுக்குள் சிறந்த யசோதை காப்பிட அழைத்த மொழியை, பெரியாழ்வார் அருளிச் செய்த இப்பாமாலையின் ஓரடியாகிய ஈற்றடி கற்றதனாலாகிய பயனை அடையவல்ல பத்தராக உள்ளவர் வினைகளெல்லாம் தன்னை விட்டுப் போம்.

## பிள்ளை விளையாட்டு

வெண்ணெய் விழுங்கி வெறுங் கலத்தை
வெற்பிடை இட்டு அதன் ஓசை கேட்கும்;
கண்ணபிரான் கற்ற கல்வி தன்னைக்
காக்ககில்லோம், உன்மகனைக் காவாய்;
புண்ணிற் புளிப் பெய்தால் ஒக்கும் தீமை
புரை புரையால் இவை செய்ய வல்ல
அண்ணற் கண்ணான் ஓர் மகனைப் பெற்ற
அசோதை நங்காய்! உன்மகனைக் கூவாய்.

தாழியில் சேமித்து வைத்த வெண்ணெயை மிச்சமின்றிக் களவில் விழுங்கி, வெறும் ஏனத்தைக் கல்லிலே இட்டுடைத்து, அவ் ஓசையைக் கேட்டுக் களிக்கும் கண்ணன் களவு காணப் படிந்துள்ளதை எங்களால் காக்க முடியாது. உன் பிள்ளையைத் தீம்பு செய்யாமல் தடுப்பாய். பலமுறை புண்ணின் மேலே புளியைச் சொரிந்ததைப் போன்ற தீம்புகளை வீடு தோறும் செய்கிறான். பலராமனுக்கு மாறான ஒரு பிள்ளையைப் பெற்ற யசோதையே, உன் பிள்ளையை அசைத்துக் கொள்.

வருக, வருக, வருக, இங்கே
வாமன நம்பீ! வருக இங்கே,
கரிய குழல் செய்ய வாய் முகத்து எம்
காகுத்த நம்பீ! வருக இங்கே,
அரியன் இவன் எனக்கு இன்று, நங்காய்:
அஞ்சனவண்ணா! அசலகத்தார்
பரிபவம் பேசத் தரிக்ககில்லேன்;
பாவியேனுக்கு இங்கே போதராயே.

என்னிடம் சடக்கென வருக, அங்கேயிருந்து தீம்புகளைச் செய்து பரிபவங் கேளாதே. இங்கே வா, நீ வாமனநம்பி அன்றோ! இங்கே வருக. கறுத்த திருக்குழலும் திருப்பவள வாயும் விளங்கும் திருமுகக் காகுத்தனன்றோ நீ. இங்கே வருவாய். அரியவனே; பலரும் விரும்பும் கரியவனே! அயலகத்தார். 'கள்ளன், தீம்பன்' என்று உன்னைப் பல குறைகள் சொல்லக் கேட்டுப் பொறுக்க மாட்டேன். என்றன் வருத்தம் தீர இங்கே வா.

திரு உடைப் பிள்ளைதான் தீயவாறு
தேக்கம் ஒன்றும் இலன், தேசு உடையன்,
உருக வைத்த குடத்தோடு வெண்ணெய்
உறிஞ்சி உடைத்திட்டுப் போந்து நின்றான்;
அருகு இருந்தார் தம்மை அநியாயம்
செய்வதுதான் வழக்கோ! அசோதாய்!
வருக என்று உன்மகன்தன்னைக் கூவாய்,
வாழ ஒட்டான் மதுசூதனனே.

அசோதாய்: உன் மகன் வீட்டில் வந்து, உருக்க வைத்திருந்த வெண்ணெயைச் சிறிதும் மிஞ்சாதபடி உறிஞ்சி,ஏனத்தையும்உடைத்துப் பின் உடைக்காதவன்போல் வந்து நின்றான். உன் வீட்டருகே இருந்தவர்கட்குக் கேடு செய்வதுதான் முறையோ? உன் பிள்ளையை.'வா' என்று சொல்லி அழைக்கவேணும். நீ அழைக்காவிட்டால் இக் கண்ணன் எங்களைக் குடி வாழ்ந்திருக்கச் செய்யமாட்டான். நன்மை செய்பவன் புன்மை செய்ய வாய்ப்புத் தராதே தாயே!



கொண்டல் வண்ணா! இங்கே போதராயே
கோயிற் பிள்ளாய்: இங்கே போதராயே
தெண் திரை சூழ் திருப்பேர்க் கிடந்த
திருநாரணா: இங்கே போதராயே
உண்டு வந்தேன் அம்மம் என்று சொல்லி
ஓடி அகம் புக ஆய்ச்சிதானும்
கண்டு எதிரே சென்று எடுத்துக் கொள்ளக்
கண்ணபிரான் கற்ற கல்வி தானே!

கார் முகில் வண்ணனே, இங்கே வருக. திருவரங்கப் பிள்ளையே, இங்கே வருக. தெளிந்த அலை சூழ்ந்த திருப்பேர் நகரில் பள்ளி கொண்டவனே, இங்கே வருக. 'அம்மம் உண்டு வந்தேன்' அம்மா என்று ஓடி வந்து அகத்தினுள் புக, தாய் யசோதை அவன் வந்த வரவையும், இடுப்பிலே எடுத்துக்கொள்ளும்படி கற்றுக்கொண்ட கல்வியின் பெருமை இருந்தவாறு என்னே?

பாலைக் கறந்து அடுப்பு ஏற வைத்துப்
பல்வளையாள் என்மகள் இருப்ப,
மேலை அகத்தே நெருப்பு வேண்டிச்
சென்று இறைப்பொழுது அங்கே பேசி நின்றேன்
சாளக்கிராமம் உடைய நம்பி
சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான்;
ஆலைக் கரும்பின் மொழி அனைய
அசோதை நங்காய்! உன் மகனைக் கூவாய்.

குடம் நிறையக் கறந்த பால் காய்ச்சுகைக்காக மிடாக்களோடும் தடாக்களோடும் அடுப்பில் ஏற்றி வைத்துப் பலவகை வளைகளை அணிந்து எம் மகள் காவலாக இருக்க, நான் பாலைக் காய்ச்ச நெருப்பு எடுத்துவர விரும்பி மேலை வீட்டிற்குப் போய், கணநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டேன். அவ்வளவில் சாளக்கிராமத்தை உடைய உன் மகன், அந்தப் பால் ஏனத்தைச் சாய்த்துப் பாலைக் குடித்துவிட்டு இங்கு வந்து ஒன்றும் அறியான் போல நிற்கிறான். கருப்பஞ் சாறுமொழி யசோதையே

உன் பிள்ளையை எமக்குத் தீமை செய்யாதபடி உன் பக்கலிலே விரைந்தழைப்பாயாக.

போதர் கண்டாய்; இங்கே போதர் கண்டாய்;
போதரேன் என்னாதே போதர் கண்டாய்
ஏதேனும் சொல்லி அசலகத்தார்
ஏதேனும் பேச நான் கேட்கமாட்டேன்
கோதுகலம் உடைக் குட்டனேயோ
குன்று எடுத்தாய்: குடம் ஆடு கூத்தா
வேதப் பொருளே என் வேங்கடவா
வித்தகனே! இங்கே போதராயே!

கண்ணா இங்கே வருக, போகாதே நில். வருகிறேன் என்று கூறாதே, அக்கம் பக்கத்துள்ளார் உன் தீராதவிளையாட்டுகளைக்கூறக் கேட்க முடியவில்லை. மகிழ்வுடையவனே! குன்றெடுத்த கோவிந்தனே; குடக்கூத்தாடியவனே! மறைப்பொருளே! என் வேங்கடவா! மாயோனே! இங்கே வருவாய்!

செந்நெல் அரிசி சிறுபருப்புச்
செய்த அக்காரம் நறுநெய் பாலால்
பன்னிரண்டு திருவோணம் அட்டேன்;
பண்டும் இப்பிள்ளை பரிசு அறிவன்;
இன்னம் உகப்பன் நான் என்று சொல்லி
எல்லாம் விழுங்கிட்டுப் போந்து நின்றான்;
உன்மகன் தன்னை, அசோதை நங்காய்;
கூவிக் கொள்ளாய்; இவையும் சிலவே!

அசோதை நங்காய்! செந்நெல் அரிசியும் சிறுபயறும் வெல்லப்பாகில் காய்ச்சித் திரட்டிய கருப்பட்டியும் மணம்மிகு நெய்யும் பாலும் கொண்டு பன்னிரண்டு திருவோணத் திருநாளையும் நோன்புக்குப் பண்ணியங்கள்சமைத்தேன். முன்பே இப்பிள்ளையின் அருமை அறிவேன். திருவோணத்திற்குச் சமைத்தவற்றை வாரி விழுங்கிடுவான். அவ்வளவு உண்டும், 'நான் இன்னமும் வேண்டியிருப்பேன்' என்று சொல்லிக்கொண்டு அவ் இடத்தைவிட்டு நகர்ந்து அயலவர் போல் நிற்கிறான்.

கேசவனே! இங்கே போதராயே
கில்லேன் என்னாது இங்கே போதராயே
நேசம் இலாதார் அகத்து இருந்து
நீ விளையாடாதே, போதராயே
தூசனம் சொல்லும் தொழுத்தைமாரும்
தொண்டரும் நின்ற இடத்தில் நின்று
தாய் சொல்லுக் கொள்வது தன்மம் கண்டாய்,
தாமோதரா! இங்கே போதராயே.

அழகிய குழலை உடையவனே! அங்கு நின்றும் இங்கே வருக. 'மாட்டேன்' என மறுக்காமல் இங்கே வருக. உன்னிடம் அன்பில்லாதவர் அகங்களிலிருந்து விளையாடாதே; பழிப்புகளைச் சொல்லுகிற வேலைக்காரிகளும் வேலைக்காரரும் இருக்கிற இடங்களில் விளையாடாதே! இங்கே வருக. தாய்ச் சொல்லைத் தட்டாமல் நடப்பது பிள்ளைகளுக்கு முறை; முன்னே கயிற்றால் கட்டுண்டதுபோல் என்னை கட்டவையேல், ஆதலால் இங்கே வருக.

—(தொடரும்).

# அகவிருள்

**திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப.**
**ஆணையாளர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை,**
**சென்னை-600 034.**

அனுபவம் பெறுவதற்கே அளித்திட்டாய் பிறவி
அனுபவத்தில் அறிந்தேன் அனுபவத்தினால்
அறியாததை
திரும்பவும் செய்கின்றேன் செய்த பிழையையே
திரும்பத் திரும்ப எடுக்கின்றேன்
பிறவியே. 1

கொடுத்தால் மட்டுமே கொடை
கொடுத்திடுவேன்
கொடையென்ற வியாபாரத்தில் முதலீடு
செய்திடுவேன்
மேலும் கொடுப்பாயென்று எதிர்நோக்கிக்
காத்திருப்பேன்
மேலான வீடுபேறு வேண்டாமென்று
இருந்திடுவேன் 2

உன்னை நினைக்கின்றேன் உன்னை
அடைவதற்கில்லை
உன்னை வாழ்த்துகிறேன் உன்னால்
கிடைத்ததற்கு
உன்னிடமே வேண்டுகிறேன் இன்னும் கேட்டு
இன்னும் கொடுத்தால் எல்லாம்
கேட்டிடுவேன் 3

உன்புகழை ஒவ்வொன்றாக ஊராருக்கு
உரைத்திடுவேன்
என்புகழை உயர்த்துகின்ற நோக்கத்தை
மறைத்திடுவேன்
உன்னருள் உள்ளவனென்று ஊருக்குக்
காட்டிடுவேன்
உன்னைச் சரணடையத் தாமதம்
செய்திடுவேன் 4

உன்னை நினைப்பதற்கு நிபந்தனை
விதித்திடுவேன்
எண்ணிலா வசதிகள் வேண்டுமென்று
கேட்டிடுவேன்
எல்லாம் கிடைத்தபின் நேரமில்லையென
இருந்திடுவேன்
நல்லவேளை வந்தால் மட்டுமே
நினைத்திடுவேன். 5

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. சென்னை-600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ. பிஎச்.டி.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம். அரசினர் தோட்டம், சென்னை-600002.



தமிழ்நாடு தெய்வீகப் பேரவைக் கூட்டம் மயிலை அருள்மிகு கபாலீசுவரர் கல்யாண மண்டபத்தில் நிகழ்ந்தது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு நடேசன் பால்ராஜ் அவர்கள், அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு ஆர்.சந்தானம், ஐ.ஏ.எஸ். அவர்கள், அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ச.. சாவர்க்கர், ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் தவத்திரு குன்றக்குடி அடிகள், தவத்திரு சாந்தலிங்க அடிகள், தவத்திரு தொண்டை மண்டல ஆதீனம், தவத்திரு மயிலம் சிவஞானபாலைய சுவாமிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.



# மாண்புமிகு தமிழக முதல்வர்
# டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின்
# தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



'இன்றும் தமிழ், என்றும் தமிழ், அறிவியலிலும் தமிழ், அனைத்திலும் தமிழ்' என்ற புதிய எழுச்சி முழக்கம் திக்கெட்டும் ஒலித்து, அமிழ்தினும் இனிய அருந்தமிழின் சிறப்பை, பார் அறியச் செய்திட்ட எட்டாவது உலகத் தமிழ் மாநாடு சீரோடும் சிறப்போடும் நடைபெற்று முடிந்த சூழ்நிலையில் மலர்கின்ற தமிழ்ப் புத்தாண்டு தமிழ் மக்களுக்கு நன்மைகள் பயக்கும் நலம் தரும் ஆண்டாக விளங்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

மலர்கின்ற 'யுவ ஆண்டு' தமிழகத்தில் வாழும் மக்களுக்கு இன்பமும் இனிமையும் நிறைந்த ஒரு காலமாக அமைய வேண்டும் என்றும், அவர்தம் முயற்சிகள் அனைத்தும் வெற்றி இலக்கினை அடைய வேண்டும் என்றும் நிறைந்த மனதோடு வாழ்த்துகின்றேன்.

தமிழ்ப் புத்தாண்டை குதூகலத்துடன் கொண்டாடும் எனதருமை தமிழகத்துப் பெருமக்களும் உலகமெங்கும் வாழுகின்ற தமிழ் நெஞ்சங்களும் எல்லா வளங்களும் நலன்களும் பெற்று ஏற்றமிக்கதோர் வாழ்வினை பெற்றிட வேண்டும் என்று எனது இதயம் கனிந்த இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.